விலை ரூபா: 10.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 29 வெள்ளிக்கிழமை (13.01.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 25

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# கடற்படை வாகனத் தொடரணி மீது
# வவு. செட்டிகுளத்தில் கிளைமோர்

## 12 பேர் பலி; 13 பேர் படுகாயம்
## ராணுவம் சூடு; பொதுமகன்பலி

(வவுனியா)

வவுனியா செட்டிகுளப் பகுதியில் நேற்று மாலை கடற்படையின் வாகனத் தொடரணி மீது இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் 12 கடற்படையினர் பலியாகினர். 13 பேர் படுகாயமடைந்தனர். அநுராதபுரக் கடற்படை முகாமிலிருந்து மன்னாருக்கு கடமைக்காக திரும்பிக் கொண்டிருந்த கடற்படையினரின் வாகனத் தொடரணி மீதே தாக்குதல் இடம்பெற்றது. கிளைமோர்த்தாக்குதல் சம்பவத்தையடுத்து இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் சிங்களவர் ஒருவர் பலியானார். மேலும் மூவர் காயமடைந்தனர். இச்சம்பவத்தினையடுத்து அப்பகுதியெங்கும் பதற்றநிலை காணப்படுகிறது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரன் பாலசிங்கம் இலங்கை வருகிறார்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இம் மாதம் இறுதியில் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இம் மாத இறுதியில் நோர்வே அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் இலங்கைக்கு வருகை தரும் நிலையில் அவருடன் பேச்சுக்களை நடத்த பாலசிங்கமும் இலங்கை வருகைதரக்கூடும் என்று கூறப்படுகிறது.

ஜனவரி 23ஆம் திகதி இலங்கை வரும் எரிக்சொல்ஹெய்ம், அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் முக்கிய பேச்சுக்களை நடத்த உள்ளார்.

இந்த நிலை (10 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச பிரதிநிதிகளுடன் தமிழ்ச்செல்வன் இன்று சந்திப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள சர்வதேச தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்குமிடையில் இன்று சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

வடக்கு கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருக்கும் மக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து செல்வது குறித்தே இச் சந்திப்பு இடம் பெறவுள்ளது.

இராணுவத்தினரின் தாக்குல்கள், கைதுகள் ,பாலியல் வல்லுறவுகள்,துன்புறுத்தல்கள் ஆகியவற்றால் அச்சமடைந்து இராணுவக்கட் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தி கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அவசர காலச்சட்டத்தின் கீழ் ஊடக நிறுவனங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இடையூறு விளைவிக்கப்படுவதற்கு எதிர்ப்புத்தெரிவித்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நேற்று பிற்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

அரசாங்கம், ஊடகவியலாளர்களுக்கு வழங்கியுள்ள ஊடக அடையாள அட்டையை பாதுகாப்புத் தரப்பினர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

5 ஊடக அமைப்புக்கள் இணைந்து இவ் ஆர்ப்பாட்டத்தினை ஏற்பாடு செய்திருந்தன. இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ,சிறிலங்கா முஸ்லிம் மீடியா அமைப்பு ,ஊடக ஊழியர் தொழிற் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம் ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமிழ் ஊடகங்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் இடையூறுகள் அதிகரித்து வருவதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர். இராணுவத்தினர் பல சந்தர்ப்பங்களில் ஊடகவியலாளர்களை கவனத்தில்கொள்ளாது ஊடகவியலாளர்களுக்கு இடையூறு விளைவிக்கின்றமை ஊடக சுதந்திரத்துக்கு பாரிய அச்சுறுத் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் கெடுபிடியால் மன்னாரிலிருந்து 24 தமிழர்கள் நேற்று படகு மூலம் இந்தியாவுக்கு சென்றனர்

(மன்னார்)

மன்னார் செல்வபுரத்தைச் சேர்ந்த 24 தமிழர்கள் படகு மூலம் நேற்று அதிகாலை இந்தியா சென்றடைந்துள்ளனர்.

தனுஷ்கோடிக்கு அருகே அரிக்கல் முனையினை வந்திறங்கிய இவர்கள் அங்கிருந்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாங்கள் நேற்று முன்தினமிரவு மன்னாரிலிருந்து புறப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் தொல்லை பொறுக்காமலேயே இந்தியாவுக்கு தப்பிவந்ததாகவும் இன்னும் 200 பேர் மன்னாரிலிருந்து இந்தியாவுக்குச் செல்லக் காத்திருப்பதாகவும் அவர்கள் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

இதனையடுத்து இந்தியா கரையோரப் பகுதியில் கடலோரக்காவல் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் யுத்தநிறுத்த ஒப்பந்தம்செய்யப்பட்டதன் பின்னர் முதன்முறையாக இந்தியாவுக்கு சென்ற முதல் அகதிகள் இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-4)

## இருவேறு கோரிக்கைகளை முன்வைத்து திருகோணமலையில் நேற்று ஹர்த்தால்

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று ஹர்த்தால் மற்றும் கடையடைப்பு என்பன இடம்பெற்றுள்ளன.

பொங்குதமிழ் சமூகம் ஒரு பக்கமும் சிங்கள விடுதலை முன்னணி என்கின்ற அமைப்பு மறுபக்கமும் நேற்றைய ஹர்த்தால் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன.

பொங்குதமிழ் சமூகம் பெரியகடை கடற்கரைப் பகுதியில் 5 தமிழ் மாணவர்கள் கொல்லப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்து கடந்த சில தினங்களாக ஹர்த்தால் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில் சிங்கள விடுலை முன்னணி என்ற அமைப்பு நேற்று ஹர்த்தாலுக்குகான அழைப்பு விடுத்திருந்தது. திருகோணமலைத்துறை முகத்தில் 13 கடற்படையினர் கொல்லப்பட்டமை பொதுமக்கள் கொல்லப்படுகின்றமை பெரிய கடற்கரைப் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக விசாரிப்பதற்கு ஆணை குழு எதுவும் நியமிக்கப்படக்கூடாது போன்ற கோரிக்கைகளின் அடிப்படையில் தாம் ஹர்த்தாலினை மேற்கொள்வதாக இவ் அமைப்பினர் அறிவித்திருந்தனர்.

இக் ஹர்த்தால் காரணமாக திருகோணமலை நகரில் இயல்பு நிலை பெரிதும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பரமேஸ்வராச் சந்தி, சிவலிங்கப் புளியடியில் இராணுவம் மீது நேற்று கிரனைட் தாக்குதல்

### இராணுவத்தினால் பரவலாக துப்பாக்கித் தாக்குதல்
### 6 பொதுமக்கள் ; 3 பொலிஸார்; ஒரு சிப்பாய் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரை அண்மித்த பகுதிகளில் நேற்றுக் காலை 11.00 மணியளவில் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட இரு வேறு கிரனைட் தாக்குதல்களில் ஒரு இராணுவசிப்பாய் ,மூன்று பொலிஸார் ;மற்றும் 6 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

பரமேஸ்வராச் சந்தி மற்றும் சிவலிங்கப்புளியடி ஆகிய இடங்களிலேயே இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பரமேஸ்வராச் சந்தியில் மேற்கொள்ளப்பட்ட கிரனைட் தாக்குதலில் மூன்று பொலிஸார் காயமடைந்தனர். இதனையடுத்து இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஐந்து பொதுமக்கள் காயமடைந்தனர்.

யாழ்.பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த எம்.அனுரரத்ன (வயது 39), டபிள்யூ பியரத்ன (வயது 46), கே.ஆரியவன்ச (வயது 49) ஆகிய மூன்று பொலிஸாருமே காயமடைந்வர்களாவர்.

தர்மலிங்கம் ராஜ்குமார் (வயது 16) நாகேஸ்வரன் சுகந்தினி (வயது 28), முருகேசு சுந்தரலிங்கம் (வயது56),நடராசா சச்சிதானந்தன் (வயது 72), குட்டித்தம்பி கனகரட்ணம் (வயது 67) ஆகியோரே இராணுவத்தின் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தனர்.

காயமடைந்த அனைவரும் சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சிவலிங்கப்புளியடியில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் துப்பாக்கி வெடித்து இளைப்பாறிய தபாலதிபர் மரணம்

### பருத்தித்துறை ஓராங்கட்டையில் சம்பவம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஓராங்கட்டைப் பகுதியில் வைத்து வயோதிபர் ஒருவர் நேற்று மதியம் இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டில் இலக்காகிப் பலியாகினார்.இளைப்பாறிய தபால் அதிபரான துன்னாலை வடக்கைச் சேர்ந்த கணபதி முருகேசு (வயது 69) என்ற வயோதிபரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். துப்பாக்கி தவறுதலாக வெடித்தினாலேயே அவர் மரணமடைந்ததாக இராணுவத்தரப்புத் தெரிவித்துள்ளது.

தனது ஓய்வூதியத்தை வங்கியில் எடுக்கச் சென்று திரும்புகையில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. மார்புப் பகுதியில் சூடு பட்ட அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இவரது சடலத்தை இராணுவத்தினரே பருத்தித்துறை வைத்தியசாலையில் ஒப்படைத்ததாக தெரிவிக்கப்பட்டது.இதேவேளை நெல்லியடி ராணிமில் ஒழுங்கையில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் இராணுவச்சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அவர் காயமடைந்தார்.

கால்பாதத்தில் காயமடைந்த அவர் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபின்னர் பலாலி இராணுவ வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். (ச-101,109,43,52,35)

## ஆன்மீக சொற்பொழிவு

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவக்கலைப் பண்பாட்டு பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்திவரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் இன்று முற்பகல 10.30 மணிக்கு 'செங்கதிரோன்' என்னும் பொருள் பற்றி சிவத்திரு. வ.குமாரசாமிஐயர் ஆன்மகச் சொற்பொழிவாற்றுவார்.(க-35)

## பொங்கல் விழா

இந்து கலாசார அமைச்சு, மீசாலை வடக்கு முருகமூர்த்தி ஆலயத்தில் பொங்கல் விழாவை சிறப்பாக நடத்தவுள்ளது.தென்மராட்சிப் பகுதி அறநெறிப் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு அதிகாரிகள் மற்றும் பலரும் இவ் விழாவில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (த-102)

# வியட்நாமிலும் ஈராக்கிலும் மூக்குடைபட்ட அமெரிக்கா இலங்கை விவகாரத்திலும் மூக்கை நீட்டுகின்றது – சந்திரசேகரன்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் பயங்கரவாதத்தை சொல்லிலும் செயலிலும் கைவிட்டு மீண்டும் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு திரும்ப வேண்டும் என்ற அமெரிக்கத் தூதரின் கருத்துக் குறித்து நாம் விசனமடைவதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வலம்புரிக்கு தகவல் தருகையில்:-

தமிழீழ விடுதலைப்புலிகளின் உண்மையான நிலைப்பாட்டை அமெரிக்கத் தூதுவர் கெப்ரி லுன்ஸ் அறிந்து கொள்ளவில்லை என்றே நினைக்கின்றேன்.

இதனால் அமெரிக்கத் தூதுவரை விரைவில் சந்தித்து பேசி சில உண்மை நிலவரங்களை எடுத்துக் கூறவுள்ளோன்.

ஐம்பது வருட கால தமிழ் மக்களின் அரசியல் போராட்ட வரலாற்றை அதன் பின்னணியை அறிந்து கொள்ளாமல் ஏதேவொரு நிர்ப்பந்தத்தினால் அவசரஅவசரமாக அமெரிக்கத் தூதுவர் இந்தக் கருத்தைக் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்கத் தூதுவரின் சொற்பிரயோகங்கள் தமிழீழ விடுதலை புலிகளையும் எச்சரிப்பதுடன் உணர்வுகளையும் அவமதிக்கின்றதாக இருக்கின்றது.

அனைத்து சிறுபான்மை மக்கள் என்று சொல்லுகின்ற போது வடகிழக்குத் தமிழர்கள் மட்டுமல்ல மலையகத்தில் வாழ்கின்ற இந்திய வம்சாவளி மக்களையும் சேர்த்துத்தான் சொல்லுகின்றேன்.

சிறுபான்மை மக்களுக்கான உரிமைப் போராட்டத்தில் மலையக மக்களும் கணிசமான அளவு பங்களிப்பு செய்கின்றனர்.

தொடர்ந்தும் வடக்குக் கிழக்கில் மக்களுக்காக குரல் கொடுப்பதுடன் பேச்சுவார்த்தையின் போது மலையக மக்களின் பிரச்சினைகளையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என எம் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்த நேரத்தில் விடுதலைப் புலிகளுக்குகெதிராக அமெரிக்கத் தூதுவர் கருத்து வெளியிட்டிருப்பது வடக்குக் கிழக்கு தமிழ் மக்களுக்கும் மலையக மக்களுக்கும் ஒரு சவாலாக அமைந்திருக்கின்றது என்றே நான் கருதுகின்றேன்.

வியட்நாமிலும் ஈராக்கிலும் அமெரிக்காவுக்கு ஏற்பட்ட அவமானத்தைப் போன்றே இலங்கையிலும் ஏற்படுவதற்கு அமெரிக்கா கொள்கை வகுப்பாளர்கள் சிலர் திட்டமிட்டுள்ளனர்.

இவர்களின் இத்தகைய தவறான கருத்துக்களை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரோ அமெரிக்க அதிபரோ கேட்டு அவமானப்படக் கூடாது என நான் கேட்டுக் கொள்கின்றேன். (க)


'மஞ்சவனப்பதியினிலே'

இசைநாடா வெளியீட்டுவிழா

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய

புகழ்பாடும் கலாபூஷணம் கலாரட்ணா,

அமரர் யாழ். **வீரமணி ஐயர்** அவர்களால்

இயற்றி இசைக்கலைஞர்களால் வடிவமைக்கப்பட்ட




"மஞ்சவனப்பதியினிலே"

இசைநாடா வெளியீட்டு விழா

**காலம்:**தைப்பொங்கல் தினமான நாளை (14.01.2006) பிற்பகல் ஒருமணி

**இடம்:**ஆலய மண்டபத்தில்

யாழ். பிரபல நாதஸ்வர தவில் எவ்.குகன் குழுவினர் வழங்கும் மங்கள இசைக்கச்சேரியும், விசேட நிகழ்வாக அப்சராஸ் புகழ் நல்லூர் ராகம்ஸ் இசைக்குழுவுடன், கலாரத்னா என்.ரகுநாதன் இணைந்து வழங்கும் இதயராகங்கள் இன்னிசை நிகழ்வும் இடம்பெறும்.

**அனைத்து மெய்யடியார்களையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**மஞ்சவனப்பதி முருகன் ஆலய இந்து இளைஞர்கள், கொக்குவில்**


## தைப்பூரண தின விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமம் நடாத்தும் தைப் பூரணதின விழாவில் இன்று முற்பகல் காலை 9.30 மணிக்கு இணுவில் பொது நூலக சனசமூக நிலையத்தில் நடைபெறும். இந்நிகழவில்' ராமகிருஷ்ண மிசனில் 'கொள்கைகளும் குறிக்கோளகளும்' எனும் பொருள்பற்றி இணைச செயலாளர் (இராமகிருஷ்ண சேவாச்சிரமம்) சி.சிவமோகன் சிறப்புரை ஆற்றுவார். (க-2)

## தீர்த்தோற்சவம்

(மந்துவில்)

தென்மராட்சி சாவகச்சேரி கல்வயல் வேதவனம் பிள்ளையார் ஆலயத்தில் இன்று தீர்த்தோற்சவமும் திருவாத்வூர் அடிகள் புராண படன படிப்பு நிறைவும் நடைபெறவுள்ளது. (த-102)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
08.06.1931

மறைவு
14.12.2005

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசத்தின் சிகரமாய்
பண்பிற்கோர் கலங்கரை விளக்காய்
நேர்மை தவறா நெறியாளராய்
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த
எங்கள் ஐயனே!
எம் இதயத்தில் வழிபடு கடவுளாய்
என்றென்றும் வாழ்வீர்கள்

உங்கள் ஆத்மா மஞ்சவனப்பதி உறை
கந்தப்பெருமானின் திருவடிகளில்
பேரின்பம் பெறுக

- குடும்பத்தினர்

## அமரர் செல்லையா தம்பித்துரை

(ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார்)

ராஜ்குடில், ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு. கொக்குவில். தொ.பேசி: 021 222 7467, 0776142584

# ஆடலாம்... பாடலாம்... தேடலாம்

## வெள்ளிநற்சிந்தனை

சந்தோஷம் என்ற பொருள் கொண்ட வார்த்தைக்கு வடமொழியில் 'மனதின் விரிவு' என்றும் ஒரு பொருள் உண்டு. நாம் எப்போது மகிழ்ச்சியாக இருக்கிறோமோ அப்



போதெல்லாம் நமக்குள் ஏதோவொன்று விரிவடைவது மாதிரி நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா? அதே மாதிரி நாம் துயருறும் போது முகமும் அகமும் குறுகிப் போகிறது அல்லவா?

நாம் எப்போது விரிவடைகிறோம்? எப்போது குறுகிப் போகிறோம் என்று நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம் இதை நாம் அறிந்து கொண்டால் நம்மிடமிருந்து யாராலும் புன்னகையை அகற்ற முடியாது இல்லையென்றால் யாரோ சொல்லும் சில வார்த்தைகள்கூட எம்மைக் கொதிக்கவைத்துவிடும்.

"எதிரியிடம்கூட இறைவனைக் காண முயற்சி செய்யுங்கள் என்று சொல்கிறார்களே... அது எப்படி முடியும்?" என்று சிலர் கேட்கிறார்கள்.

நீங்கள் விரும்பாத ஒருவரைப் பற்றி நினைக்கும்போது எவ்வாறு உணருகிறீர்கள் என்பதைக் கவனித்திருக்கிறீர்களா? உங்களுக்குள் கோபம் கொப்புளிக்கும் எரிச்சல் அதிகரிக்கும் சுருக்கமாகச் சொன்னால் நீங்கள் வெறுக்கும் அந்த நபரின் தீக்குணங்கள் அனைத்தும் உங்கள் உடலில் பிரதிபலிப்பதைக்காணமுடியும். நாம் யாரை வெறுக்கிறோமோ அவர்களைப் பற்றித்தான் அதிகமாகச் சிந்திக்கிறோம். அவர்களைப்பற்றிச் சிந்திபபதால் அதிகமான மன உளைச்சல் ஏற்படுகிறது. ஆதலால் நீங்கள யாரை வெறுக்கிறீர்களோ அவாகளிடம் இறைவனைக்காண முயற்சி செயயவேண்டாம். குறைந்த பட்சம வெறுமையை, அதாவது வெற்றிடத்தைக்காண முயற்சி செய்யுங்கள்.

ஏனெனில் வெறுமையிலிருந்துதான் எல்லா உணவுகளுமே தோனறுகின்றன. எல்லா எண்ணங்களும் வெறுமையிலிருந்துதான் புறப்படுகின்றன. உள்ளுணர்வு, கவிதை இவை அனைத்துமே எங்கிருந்து வருகின்றன? எல்லா எணணங்களுமே உள்ளே, ஆழத்திலிருக்கும் ஒரு வெற்றிடத்திலிருந்துதான் வருகின்றன. அந்த வெற்றிடமாக இருக்கப் பழகிக்கொண்டால் வாழ்க்கை ஒரு புதிய கோணத்தில் துலங்கும்.

உங்களால் எப்போது அனைவரையும் நேசிக்க முடியும் என்று நான் சொல்லவில்லை. அது இயலாது ஏனெனில் நேசிப்பது என்பது வெறும் செயல் அல்ல. அது நீங்கள் சுலபமாகப் பயிற்சி செய்துவிடக்கூடிய ஒன்றும் அல்ல. நேசம் என்பது உங்களிடம் தானாகவே நிகழவேண்டும்.

ஒரு பெரிய சூப்பர் மார்க்கட்டுக்குப் போகிறீர்கள் அங்கே வரிசையாகப் பல பொருட்களைப் பார்க்கிறீர்கள் அங்கேயுள்ள அனைத்துப் பொருட்களையும் நீங்கள் விரும்புவது இல்லை. இந்தப் பொருட்களையெல்லாம் விரும்ப வேண்டுமென்று நீங்கள் அந்தச் சூப்பர் மார்க்கட்டுக்குப் போகும் போது நீங்கள் உங்களுக்குச் சொல்லிக்கொள்வது இல்லை. அதாவது உங்களது விருப்புகளை நீங்கள் தயாரிப்பதும் இல்லை. நேசமும் அது மாதிரித்தான்.

ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள் உங்களை நீங்கள் முழுமையாக நேசிக்காத போது எவ்வாறு நீங்கள் அனைவரையும், அதுவும் நீங்கள் வெறுக்கும் ஒருவரை நேசிக்கமுடியும்?

நேசம் என்பது ஒரு செயல் அல்ல அது ஒருநிலை ஆழ்ந்த தியானத்தில்... வெறுமையான நிலையில்... இயல்பாகப் பாய்வதுதான் நேசம். அது திணிக்கப்படுவதில்லை வாழ்க்கையில் நேசம் என்பது ஒரு நிலையாக ஆகும் போது உங்களால் உங்கள் எதிரியைக்கூட நேசிக்காமல் இருக்க முடியாது.

**ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

நன்றி ஆனந்தவிகடன்

> **மனிதன் மனிதன்... எவன்தான் மனிதன்**
>
> மனிதன் அறிவுடையவனாக மட்டும் இருந்தால் போதாது. குழந்தையைப் போல மகிழ்ச்சியாகவும் அவன் இருக்க வேண்டியது மிக மிக முக்கியம குழந்தைக்குரிய குணாதிசயம் என்பது கள்ளங்கபடமற்று இருத்தல். இந்தக குணாதிசயம இல்லாத ஒருவன் அறிவுடையவனாக மட்டும் இருநதால் அவனுடைய புத்தி நாளுக்கு நாள் குறுக்குப் புத்தியாக மாறும். அறிவில்லாமல், கள்ளங்கபடமில்லாத குழந்தைத்தனத்தோடு மட்டும் ஒருவன இருந்தால் அதற்கும் மதிப்பபே இல்லை குழந்தைக்குரிய நற்குணங்கள் என்பதற்கு மனம் குறியீடு என்றால் அறிவுக்குக் குறியீடுகளை மூளை , மனம இரண்டும் சம அளவிலும் வேகத்திலும் யாருக்கு வளர்ச்சியடைகிறதோ அவரே பூரணமான மனிதர்.

## நூல் வெளியீடு

குருநகரின் சிறப்பியல்புகளை வெளிக்கொணரும் முகமாக கு.இராயப்பு எழுதிய 'கடலலைகள் கொஞ்சும் நகா' என்ற நூல்வெளியீடு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.30மணிக்கு குருநகர் கார்மேல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குருநகரின் சிறப்பியல்புகள், வாழவியல்கள் தொழில்சார் முறைமைகளை வெளிக்கொணரும் வகையில 'கடலலைகள் கொஞ்சும நகர்' என்ற நூலை நெயோ கல்சரல்கவுனசில் வெளியீட்டகம் வெளியிடுகின்றது.(க-51)

## குப்பைகள் அகற்றப்படவில்லை

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தை அண்மித்த பகுதியில் கொடடப்பட்ட குப்பைகள் பல நாட்களாக அகற்றப்படாமல் உள்ளது. இதனால் பிறவுண் வீதியால் செல்லும் பயணிகள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (க-2)

## ஆயுதம் ஏந்திப் போராட அனைவரும் முன்வர வேண்டும்

### தயாமோகன் அழைப்பு

தமிழீழத்திலுள்ள தமிழ் மக்களில் ஆயுதம் தாங்கிப் போராடும் வலுவுள்ள அனைவரும் தேசியப் படையாக, எல்லைப் படையாக, துணைப்படையாக, கிராமியப் படையாக ஆயுதப் பயிற்சி எடுத்து போராட வேண்டும் என மட்டுமாவட்ட அரசியல் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்துள்ளார். ஈரளக்குள மக்களுக்கான கிராமியப் பயிற்சிக்கான ஆரம்பக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரை நிகழத்தும்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் எமது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு வளர்ந்து விருட்சமாக நிற்கின்ற போதும் பல்வேறு துரோகத்தனங்களை எதிர் கொண்டு தமிழ் மக்கள் தங்களது உரிமைகேட்டு அகிம்சைவழியில் போராடிய காலம் தொட்டு தற்போது சமாதான காலம்வரை துரோகத்தனங்களை எதிர்தது எமது போராட்டம் வளர்ச்சி அடைந்துள்ளது.

இவ்வாறு வளர்ச்சியடைந்திருக்கும் விடுதலைப் போராட்டத்தில் அந்த இன மக்களின் பங்களிப்பு இருக்கவேண்டும். அதற்குரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தில் அனைவரும் ஒன்றுதிரண்டு எழுச்சி கொண்டுள்ளனர் என்பதை சிங்கள தேசத்திற்கும் சர்வதேசத்திற்கும் எடுத்துக் காடடவேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார். (க)

# இராசி பலன்

**13.01.2006**
**(மார்கழி 29, வெள்ளிக்கிழமை)**
**சதுர்த்தசி பிற்பகல் 2.32 மணிவரை**
**திருவாதிரை முன்னிரவு8.13மணிவரை**
**இராகுகாலம் 11.03-12.33 மணிவரை**
**சுபநேரம் 6.33-8.03 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | நண்பர்கள் உதவி, புதியதகவல், தெய்வ தரிசனம், எடுத்தகாரியம் கைகூடும். |
| இடபம் | ஆரோக்கியக்குறைவு, காரிய இடையூறு, மனச்சஞ்சலம், வீண்பகை. |
| மிதுனம் | தெய்வசிந்தை, நல்ல முயற்சி, சொத்துக்களால் நன்மை, போசனசுகம். |
| கடகம் | காரிய அலைச்சல், மரியாதைக்குறைவு, தெய்வசிந்தை, பொருள்விரயம். |
| சிங்கம் | குடும்பசுகம், காரிய அனுகூலம், அதிகாரம், தொழில் வருமானம். |
| கன்னி | தெய்வநம்பிக்கை, தொழில்மேன்மை, பிறர் உதவி, உற்சாகம். |
| துலாம் | புதிய திட்டமிடல், பிதாசிந்தை, கட்டுப்பாடு, ரோகநிலை. |
| விருச்சிகம் | வீண்பகை, காரியதடங்கல், கௌரவக் குறைவு, பிரயாணம். |
| தனுசு | செல்வாக்கு, காரிய அனுகூலம், அபூர்வ சந்திப்பு, தொழில்நன்மை. |
| மகரம் | பகைவர்நேசம், நல்ல முயற்சி, போசன சுகம், தேகநலன். |
| கும்பம் | தெய்வசிந்தை, எடுத்தகாரியம் தாமதமாகும், சகோதரர் உதவி, போசனசுகம். |
| மீனம் | கல்வியில் ஆர்வம், முயற்சி தாமதம், வாக்கு மேன்மை, புதியதகவல். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
- வளவன்

# மிதிவெடி அகழ்வு கருவிகளை மீள ஒப்படைப்போருக்கு "ஹலோ.டிரெஸ்ட்" வெகுமதிவழங்குமென அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 27ஆம் திகதி ஹலோ டிரெஸ்ட் வளாகத்திற்குள்ளும், அலுவலகத்திற்குள்ளும் உட்புகுந்த சிலர் அங்கிருந்த பெருந்தொகையான கருவிகள், ஒரு கணனி இயந்திரம், 43 உணர்கருவிகள், 6 வானொலித் தொலைத்தொடர்பு கருவிகள் மற்றும் மின்கலன்கள் சிலவற்றையும் சூறையாடிச்சென்றனர்.

இவ்விடயம் சம்பந்தமாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் விளைவாக அவர்கள் சந்தேகதிற்குரியவர்களின் வீடுகளுக்குச் சென்று தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதோடு கைது செய்தல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இருந்தபோதிலும் இக்கருவிகளை பதுக்கி வைத்திருக்கும் இடங்களை இன்னும் இனங்காணக்கூடியதாக இல்லை. இதனால் ஹலோ டிரெஸ்ட் நிறுவனமானது சர்வதேச நன்கொடையாளிகளுக்குச் சொந்தமான இருக்கருவிகளை மீட்டுத் தருபவர்களுக்கு அல்லது இவைகளின் இருப்பிடம் சம்பந்தமாக சரியான தகவல் கொடுப்பவாகளுக்கு கணிசமானதொரு வெகுமதியை வழங்குவதற்கு முன்வந்துள்ளது. தனித்தனியாகவேனும ஒப்படைக்கப்படும் ஒவ்வொரு கருவிகளுக்காகவும் வெகுமதி வழங்க உத்தேசித்துள்ளது. ஹலோ டிரெஸ்ட் நிறுவனமானது தமிழ் மக்களின் நலன் கருதி மிதிவெடி அச்சுறுத்தல்களை நீக்குவதன மூலம் அவாகள் பாதுகாப்பாக வாழவதற்கு வழிவகுப்பதோடு அவர்களின் நிலங்களையும் அபிவிருத்தி செய்யக் கூடிய விதமாக பணியில் ஈடுபடுவதற்கு தன்னை அர்ப்பணித்துள்ளது.

அத்தோடு நிறுவனத்தின் நம்பிக்கைக்குப் பத்திரமான ஊழியர்களுக்காக மிதிவெடி அகழ்வுநடவடிக்கைகளைத் தொடர்ந்தும் யாழ். குடாநாட்டில் மேற்கொண்டு தமிழ் மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு இத்தாராளமான வெகுமதியை வழங்கவிருக்கின்றது. (க)

## எந்தவொரு சவாலையும் சமாளிக்க படையினர் தயார்-இராணுவப் பேச்சாளர்

படையினர் போர்நிறுத்த உடன்பாட்டை நூற்றுக்கு நூறு வீதம் கடைப்பிடிப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் நாட்டில் உள்ள மக்களின் நலன் கருதி மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக்காலத்தில் 55 படையினர் கொல்லப்பட்டனர். 13 கடற்படையினர் காணாமல் போயுள்ளனர். இராணுவத்தை இலக்குவைத்து புதைக்கப்பட்ட 15 கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. எனவே படையினர் எந்தவொரு சவாலையும சமாளிக்க தயார் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

## விடுதலைப்புலிகளை தடைசெய்வதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மறுப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய அதன் உறுப்புநாடுகள் சில எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகக கூறப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு ஆகக்கூடியதான ஆதாரங்கள் எதுவும் இல்லாத நிலையில் தடைசெய்வது என்பது சரி அல்ல என்றும் அந்த நாடுகள் வாதிட்டுள்ளன.

சமாதானப் பேச்சுகளைக் காரணம்காட்டி ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப் பட்டியல் தொடர்பான வழிகாட்டுதலை நோர்வே அரசாங்கம் அண்மையில் நிராகரித்திருந்த நிலையில் ஐரோப்பிய ஒனறிய உறுப்பு நாடுகளுக்கே தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய எதிர்ப்பு எழுந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-4)

## "அனைவருக்கும் மின்சக்தி"

2010 ஆம் ஆண்டளவில் 'அனைவருக்கும் மின்சக்தி' என்ற தொனிப்பொருளில் விசேடதிட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கமைய மேல்கொத்மலை, நுரைச்சோலை, மொறகொல்லை மற்றும் உமாஓயா போன்ற சிறிய மற்றும் நடுத்தர அளவிலான மின் உற்பத்தித்திட்டங்களின் பூர்வாங்க நடவடிக்கைகள் இந்த வருடம் ஆரம்பமாகும்.

இதேவேளை, மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் டபிள்யூ டி.ஜே.செனவிரட்ண கருத்துவெளியிடுகையில், சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெறுபவர்களுக்கு எதிராக திடீர்சோதனைகள் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டார்.

பாவனையாளர் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் விசேட கவனஞ் செலுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-7)

## அனைத்து வறிய குடும்பங்களும் சமுர்த்தி நிவாரணம் பெறுவர்

(கொழும்பு)

கூடுதல் வருமானம் பெறும் குடும்பங்கள் தமக்கு வழங்கப்பட்ட சமுாத்தி நிவாரண அட்டைகளைத் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்குச் சாதகமான பதில் கிடைத்துள்ளது.

இதன் காரணமாக சமுர்த்தி அனுகூலங்கள் கிடைக்காத சகல வறிய குடும்பங்களுக்கும் நிவாரணங்களை வழங்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்புத் தொடாபான அமைச்சர் பவித்திரா வன்னியாராட்சி தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் 'ஜனபுபுது' என்ற திட்டத்தின் ஊடாகப் பெற்றுக்கொடுக்கப்பட்ட கடன் நிவாரணங்கள் மூலம் சிறிய அளவிலான வர்த்தக முயற்சிகளை மேம்படுத்தக்கூடியதாக இருந்தது.

அதனுடன் இணைந்ததாக சமுர்த்தி பயனாளிகளின் உற்பத்திப் பொருட்களை சர்வதேச மட்டத்திற்கு தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

சமுர்த்தி ஆணையாளர் யூ. என்.ரொட்லிகோ இதுபற்றித் தெரிவிக்கையில் சமுர்த்தி அமைச்சு இலங்கையின் வறிய மக்கள் தொடர்பான சீரான மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளது என்று கூறினார்.

இந்த மதிப்பீட்டின் மூலம் வறிய மக்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கும் முயற்சிகளை மேலும் விஸ்தரிக்கக்கூடிய வாய்ப்பு உருவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (க-7)

## இன்று ஒரு தகவல்

# நம்பிக்கை

ஒருமுறை நாரதர் தெருவழியாகப் போய்க் கொண்டிருந்தார். வழியில் ஒருவர் வேதசாஸ்திரம் படித்துக் கொண்டிருந்தார். அவர் நாரதரைப் பார்த்து "எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். "கடவுளைப் பார்த்துவிட்டு வரலாம் என்று போய்க்கொண்டிருக்கிறேன்" என்றார் நாரதர். "அப்படியென்றால் அவரிடம் எனக்கு எப்போது முக்தி கிடைக்கும் என்று கேட்டுக்கொண்டு வாருங்கள்" என்றார் இவர். சரி கேட்டுக்கொண்டு வருகிறேன் என்று கூறிவிட்டு நாரதர் நடந்தார்.

கொஞ்சத் தூரத்தில் ஒரு மரத்தடியில் ஒரு தொழிலாளி செருப்பு தைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். அந்த ஆளும் அதே மாதிரிக் கேட்டார். அவரிடமும் சரி என்று கூறிவிட்டு நாரதர் நேராக வைகுண்டத்திற்கு வந்து சேர்ந்தார். கடவுளைப் பார்த்தார். இவர்களிருவரும் சொல்லியனுப்பிய விடயத்தைப் பற்றிக் கேட்டார்.

அதற்கு கடவுள் சொன்னார் "அந்த செருப்புத் தைக்கும் தொழிலாளி உடல் நீத்ததும் உடனே என்னை வந்தடைவான். ஆனால் அந்த சாஸ்திரம் படித்த ஆள் இப்போதைக்கு என்னிடம் வந்துசேரமாட்டான். அவன் இன்னும் பல பிறவிகள் எடுத்து அங்கேயே இருக்க வேண்டியிருக்கிறது. எப்போது இங்கே வந்து சேருவான் என்று எனக்கே தெரியாது" என்றார்.

நாரதருக்கு இதன் ரகசியம் என்னவென்று புரியவில்லை. "எனக்கு ஒன்றும் புரியவில்லையே" என்றார் கடவுளிடம். "விரைவில் புரிந்துகொள்வாய்! நீ திரும்பிப் போகும்போது நான் இங்கே வைகுண்டத்தில் என்ன செய்துகொண்டிருக்கிறேன் என்று கேட்டால்...ஒரு ஊசியின் துவாரத்தில் ஒரு யானையை கோர்த்துக் கொண்டிருக்கிறேன் என்று அவர்களிடம் சொல்" என்றார் கடவுள் சிரித்துக் கொண்டே.

நாரதர் பூமிக்குத் திரும்பினார். "கடவுளைப் பார்த்தீர்களா... எப்படியிருக்கிறார்" என்று விசாரித்தார் வேத சாஸ்திரம் படித்தவர். "ஓ... பகவானா... அவர் யானையை ஊசியின் காதில் நுழைத்துக் கொண்டிருந்தார்... பாாத்தேன்!" என்றார் நாரதர். "ஊசியின் காதில் யானையா? அது எப்படி முடியும்... நீங்கள் சொல்வதை நான் நம்பமாட்டேன்" என்று விட்டார். "சரி... இந்த ஆளுக்கு இறைவன் மீது நம்பிக்கை இல்லை" என்பதை நாரதர் புரிந்துகொண்டார்.

அடுத்ததாக அந்தத் தொழிலாளி இருந்த இடத்திற்குப் போனார். "இறைவனைப் பார்த்தீர்களா?" என்று கேட்டார் அவர். "பார்த்தேன்... ஒரு ஊசி துவாரத்தில் யானையைக் கோர்த்துக் கொண்டிருந்தார்" என்று கூறிவிட்டு நாரதர் அந்த ஆளின் முகத்தைக் கவனித்தார்.

அந்தத் தொழிலாளி இதைக் கேட்டுவிட்டு கொஞ்சம்கூட ஆச்சரியப்படவில்லை. "அவரால் முடியாத காரியம் கூட உண்டா?" என்றார். "என்ன இப்படிச் சொல்கிறாய்? ஊசியின் துவாரத்தில் யானையை கோர்க்க முடியும் என்று நீ நம்புகிறாயா?" என்று கேட்டார் நாரதர். "நிச்சயமாக நம்புகிறேன்" என்றார் அவர்.

"அது எப்படி?" என்று கேட்டார் இவர். "இதோ பாருங்கள். நான் இந்த ஆலமரத்தடியில் தான் தினமும் உட்கார்ந்திருக்கிறேன். தினமும் இந்த மரத்தில் இருந்து எவ்வளவு பழம் கீழே விழுகிறது. இந்தப் பழத்தில் இருக்கும் ஒவ்வொரு விதையிலும் உள்ளே ஒரு ஆலமரம் இருக்கிறது. "ஒரு சிறிய விதைக்குள்ளே ஒரு பெரிய ஆலமரம் இருக்க முடியும் என்கின்றபோது... ஊசித் துவாரத்தில் கடவுள் யானையை நுழைய வைத்தார் என்பதை ஒத்துக்கொள்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது?" என்று மிகவும் சர்வ சாதாரணமாகச் சொன்னார் அந்தத் தொழிலாளி.

நாரதர் யோசித்தார். இந்தத் தொழிலாளி வேத சாஸ்திரங்களைப் படிக்காவிட்டால் கூட அறிவுபூர்வமாக சிந்தித்து இறைவனை நம்புகிறான்... அதனால்தான் கடவுள் இந்த ஆளுக்கு விரைவில் முக்தி கிடைக்கும் என்று சொன்னார் என்பதைப் புரிந்துகொண்டார். இந்தக் கதையில் வரும் கடவுள்... நாரதர் வைகுண்டம் எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். ஒரு சிறிய விதைக்குள் ஒரு பெரிய ஆலமரம் தூங்கிக் கொண்டிருப்பது உண்மை. அந்தரத்தில் ஆயிரம் கிரகங்கள் சுற்றிக்கொண்டிருப்பது உண்மை.

இந்த உண்மைகள் அதிசயமாக நமக்குத் தெரிவதனால் அதை நம்பாமல் இருந்துவிட முடியாது. இயற்கையைப் பரிபூரணமாக நம்புங்கள். அந்த நம்பிக்கையே நமது வாழ்வுக்கு ஆதாரம் என்பதை விளக்குவதற்காகத்தான் இந்தக் கதை. இந்தக் காலத்தில் நமது பிள்ளைகளுக்கெல்லாம் இதுபோன்ற நம்பிக்கை அதிகமாகவே இருக்கிறது.

ஒருநாள் ஒருசிறுவனிடம் கேட்டேன். "ஏனப்பா... கடவுள் ஒரு பானைக்குள் ஒரு யானையை நுழைய வைத்துவிட்டார் என்று சொன்னால் அதை நீ நம்புவாயா?" என்று கேட்டேன். "நம்புவேன் சார்... அது ஒன்றும் பெரிய ஆச்சரியமில்லை" என்றான். 'எப்படி? என்று கேட்டேன். "அந்தப் பானை அந்த யானையை விடப் பெரிதாக இருந்திருக்கும்... அவ்வளவுதான்" என்றார் சார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# யாழில் காணாமல் போவோர் எண்ணிக்கை அதிகரிப்பு விசாரணை இயக்குநர் நிமல் புன்சிகேவ தெரிவிப்பு

(கொழும்பு)

மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் யாழ்ப்பாணத்தில் டிசம்பர் மாதத்தில் மட்டும் காணாமல் போனோர் தொடர்பாக 20 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அதன் விசாரணை இயக்குநர் நிமல் புன்சிகேவ தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் காணாமல் போவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள், பொலிஸ்மா அதிபர் மற்றும் பிரதி சட்டமா அதிபர் ஆகியோருடன் கடந்த செவ்வாய்க்கிழமை நிமல் புன்சிகேவ ஆலோசனை நடத்தினார்.

இச்சந்திப்பு குறித்து நிமல் புன்சிகேவ மேலும் கூறியதாவது,

தங்களது பணிக்காக வீதியில் சென்று கொண்டிருக்கும்போது, இரவு நேரங்களில் இவர்களில் சிலர் கடத்தப்பட்டுள்ளனர். இந்தக் கடத்தலுக்கான பொறுப்பு யார் என்பதை ஆணைக்குழுவால் நிருபிக்க இயலவில்லை. அவசரகாலச் சட்டத்தின் கீழான கைது நடவடிக்கைகள் தொடர்பில் உரிய ஒழுங்கு முறைகளுக்கமைய மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு தகவல் தெரிவிக்கப்படுமென்று பாதுகாப்பு அமைச்சினர் உறுதியளித்துள்ளனர்.

அதேபோல அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவோரின் உரிமைகளை மதித்துச் செயற்பட பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவும் ஒப்புக் கொண்டுள்ளார்.

கைது செய்யப்பட்டோர் தொடர்பான விவரச் சீட்டு கையளிக்கப்பட வேண்டும். அவர்களுக்கான சட்ட உதவிகள் செய்துதரப்பட வேண்டும். கைது செய்யப்பட்டோரை சந்திக்க அனுமதிக்க வேண்டும் ஆகியவற்றையும் பொலிஸ்மா அதிபர் ஏற்றுக்கொண்டுள்ளார் என்றார் அவர்.

இதனிடையே மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பேச்சாளர் மஹிந்த ஹடக்க இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், எமது யாழ்ப்பாண அலுவலக ஒருங்கிணைப்பாளர் அளித்த தகவலின் படி 16 பொதுமக்கள் அரச படையினரால் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்கள் குறித்து எதுவித தகவலும் இல்லை என்று உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த முறைப்பாடுகளை ஓய்வுபெற்ற தலைமை நீதிமன்ற நீதிபதி டி.சுந்தரலிங்கம் விசாரித்து வருகிறார். பொதுமக்களை அரச படையினர் கைது செய்யும்போது உரிய வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ராதிகா குமாரசுவாமி வலியுறுத்தியுள்ளார். மேலும் கைது செய்யப்பட்டுள்ள நபர்களைச் சந்திப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளை ராதிகா குமார சுவாமி கேட்டுக்கொண்டுள்ளார் என்றார் மஹிந்த ஹடக்க.

ஆனால் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க கூறுகையில், நாங்கள் யாரையும் கைது செய்யவில்லை. நாங்கள் யாரையாவது கைது செய்தாலும் அவர்களை எமது பொறுப்பில் வைத்திருப்பதில்லை. பொலிஸாரிடம் ஒப்படைத்து விடுகிறோம். மனித உரிமைகள் பற்றி நாம் எமது படையினருக்கு கற்றுக் கொடுத்திருக்கிறோம் என்றார்.

(அ)

# பேச்சுவார்த்தைக்கு திரும்புமாறு புலிகளுக்கு அமெரிக்கா அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் வன்முறைகளை கை விட்டு விட்டு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

உலக வர்த்தக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமெரிக்க வர்த்தக சம்மேளனக் கூட்டத்தில் உரையாற்றிய இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் ஜெவ்ரி லான்ஸ் டெட் இதனைத் தெரிவித்தார்.

அமைதிப் பேச்சுக்களை கைவிட விடுதலைப் புலிகள் முடிவு செய்தால் அவர்கள் அதிக வலுவுள்ள இலங்கை இராணுவத்துக்குக் கடுமையாக முகம் கொடுக்க நேரிடும் என்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இலங்கை அமைதி முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டுதான் இருக்கிறது. இருந்தாலும் பயங்கரவாதத்திற்கு பதிலடி கொடுக்கும் யுக்திகள், சட்டவிரோத நிதிப் பரிமாற்றம் உள்ளிட்டவைகளுக்காக எமது இராணுவ பயிற்சிகள் மற்றும் உதவிகள் இலங்கைக்கு அளிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் பயங்கரவாதத்தை சொல்லிலும், செயலிலும் கைவிட்டு விட்டு மீண்டும் அமைதிப் பேச்சுக்கு திரும்பவேண்டும்.

இலங்கை அரசாங்கம் மக்களைப் பாதுகாக்கவும் தன்னைப் பாதுகாக்கவுமான வலுவைப் பெறுவதற்கு நாம் உதவுகிறோம். இவ்வாறான சூழ்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தையை விட்டு விடுதலைப் புலிகள் ஒரு அடி நகர்ந்தாலும் அது ஆபத்தானதொரு கட்டமாகும். அவர்கள் வலுவான அதாவது எமது ஆதரவுடனான இராணுவத்துடனேயே யுத்தம் செய்ய வேண்டியிருக்கும்.

வர்த்தகர் கூட்டத்தில் இத்தனை கடுமையாக அமெரிக்க தூதர் ஏன் பேசுகிறார் என்று உங்களுக்கு கேள்விகள் எழக் கூடும். அமைதி முயற்சிகள், வர்த்தக சமூகத்தினருக்கு அவசியமானது.

எனவே விடுதலைப் புலிகள் பயங்கரவாதத்தைச் சொல்லிலும், செயலிலும் கைவிட்டுவிட்ட அமைதிப் பேச்சுக்கு திரும்ப வேண்டும் என்றார் அவர். (க-4)

# வடக்கு-கிழக்கில் வன்முறைகள் அதிகரிப்பு; தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் சமீபகாலமாக வன்முறைகள் அதிகரித்து வருவது பற்றி சர்வதேச பொது மன்னிப்புச் சபை கவலை தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வடக்கு-கிழக்கில் நாளாந்தம் இடம்பெறும் படுகொலைகள், ஆட்கடத்தல்கள் மற்றும் ஆட்கள் காணாமல் போதல் போன்றவற்றைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு சகல தரப்புக்களையும் கோரியுள்ளது.

மட்டக்களப்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஆயுதபாணிகளால் சுட்டுக்கொல்லப்பட்டமை, திருகோணமலையில் மாணவர்கள் 5பேர் படுகொலை செய்யப்பட்டமை உள்ளிட்ட பல வன்முறைச் சம்பவங்கள் பற்றிய செய்திகளைக் கேட்டு பொதுமன்னிப்புச் சபை அதிர்ச்சி அடைந்துள்ளதாக அதன் ஆசிய பசுபிக் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச பொது மன்னிப்புச்சபை இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச மனிதாபிமான விழுமியங்களை மதித்து நடப்பதற்குரிய கட்டுப்பாட்டை நிறைவேற்றுமாறு அந்த அமைப்பு விடுதலைப் புலிகளையும் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-79)

# மூன்று பொலிஸாரையும் விடுவிப்பதற்கு சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை முயற்சி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் காவலில் வைக்கப்பட்டுள்ள மூன்று பொலிஸ் அதிகாரிகளையும் விடுவிப்பதற்கு சர்வதேச சமூகத்தை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கோரவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே வைக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி டாக்டர் கிரிந்தி விஜயமால தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் தலையிடுமாறு ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் கல்வி நிதியத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் பிரித்தானிய நாட்டைச் சேர்ந்த ஒருவரைக் கைதுசெய்ய கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி சென்றிருந்தபோது இந்த 3 பொலிஸ் அதிகாரிகளும் விடுதலைப் புலிகளின் காவல் துறையினரினால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

அத்துடன் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கீழ் கடமையாற்றி வந்த இந்த 3 பொலிஸ் அதிகாரிகளையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதிமன்றம் அண்மையில் உத்திரவிட்டிருந்ததாக தமக்கு தகவல் கிடைத்துள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (க-9)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு




திருவருள் தவநெறி மன்றத்தின் கிளைமன்றங்கள் பல ஊரில் நிறுவினேன். இன்று ஜெயங்கொண்ட சோழபுரத்தில் மட்டும் திருவருள் தவநெறி மன்றத்தின் கிளை செழிப்பாக ஓங்கி வளர்ந்திருக்கின்றது. அயராது தொண்டு புரிகின்றது.

ஒரு சமயம் தஞ்சையில் இராஜராஜ சமய சங்கத்தில் தொடர் விரிவுரை நடத்தினேன். சங்கத்தார்கள் எனக்குத் தரவந்த சம்பாவனை முழுவதையும் வடலூரில் O.P.ராமசாமி ரெட்டியார் நடத்திவரும் குருகுலத்திற்கு அனுப்புமாறு செய்தேன். அவ்வாறு அனுப்பிய அட்வகேட் இராஜராஜேச்வரன்பிள்ளை என்னிடம் ரசீது கேட்டார்.

நான் "ஐயா! தாங்கள் அட்வகேட்டு ஆயிற்றே! பணத்தை O.P.R. அவர்களுக்குத் தானே அனுப்பினீர்கள்! O.P.Rக்கு அனுப்பிவிட்டு என்னிடம் ரசீது கேட்கிறீர்களே! இது என்ன நியாயம்?" என்று கடிந்து கூறினேன். அவர் பதில் கூறத்தெரியாமல் விழித்தார்.

### எவரெஸ்ட்டு யாத்திரை

சென்னையில் என்னைத் தந்தைபோல் பாவித்துச்சிந்தை செய்து அன்பாகப் பழகுபவர் சீதாராமமேஸ்திரி அவர்கள். இவர் ஒருமுறை நேபாளம் சென்று எவரெஸ்ட்டு பார்த்து வந்தார். அதனைப் பார்க்கச்செய்யவேண்டுமென்று பெரிதும் விரும்பினார். அதற்குண்டான ஆயத்தங்கள் அனைத்தும் செய்தார்.

பாரத் டிராவல் சர்வீஸ் மூலம் விமான டிக்கட்டு ஒழுங்குசெய்யப்பெற்றது. 17-5-1976இல் விமானத்தில் புறப்பட்டேன். என்னுடன் 40 அன்பர்கள் விமானத்தில் வந்தார்கள். சிறந்த இசை வாணரும், சீலமுடையவருமாகிய சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் குடும்பத்துடன் என்னுடன் வந்தார்

கல்கத்தா விமான நிலையத்தில் திரு P.சுப்ரமண்யம் அவர்கள் எங்களைச் சந்தித்து உபசரித்தார். மாலை 3 மணிக்கு நேபாளத் தலைநகர் காட்மாண்டு சேர்ந்தோம். அன்றுமாலை பசுபதிநாதரைத் தெரிசித்தோம்.

18ஆம் திகதி அதிகாலை வழிபாடு செய்து 40 அன்பர்களும் பசுபதிநாதர் திருக்கோயிலுக்குப் போய் பசுபதிநாதருக்குச் சிறந்த அபிஷேக ஆராதனைகள் செய்தோம். எங்கள் 40பேருக்கும் சுவாமிமேல் அணிவித்திருந்த பரு உருத்திராட்சமாலை பிரசாதமாகத் தந்தார்கள்.

19ஆம் திகதி காலை கொட்டுகின்ற பனியையும் மழையையும் நாங்கள் பொருட்படுத்தாமல் நீராடி வழிபாடுசெய்து, ஆண்கள், பெண்கள் அனைவரும் பரு உருத்திராட்ச மாலையை அணிந்து கொண்டு மாமனார் வீட்டுக்குப் போகின்ற மருமகனைப் போல் ஆர்வத்துடன் பேருந்துவில் ஏறி விமான நிலையம் சென்றோம். கௌரீ சங்கர் என்ற குன்றையும், எவரெஸ்ட்டையும் காண எங்கள் கண்கள் துடித்தன.

விமான நிலையம் சென்றவுடன் வானம் மப்பும், மந்தரமும், மழையுமாக இருந்தபடியால் விமானம் எவரெஸ்ட்டுக்குச் செல்லாது என்று விமான அதிகாரி கூறிவிட்டார். நாங்கள் எல்லோரும் சேர்ந்து 1 லட்சம் ரூபாய் செலவழிக்குக்கொண்டு எவரெஸ்ட்டையும், கௌரீ சங்கர் குன்றையும் காணவேண்டுமென்று விரைந்து பறந்துசென்ற எங்களுக்கு விமானம் பறக்காது என்ற சொல் வானம் இடிந்து தலையில் விழுந்ததுபோல் இருந்தது. மறுநாள் இருந்து பார்ப்பதற்கும் இல்லை. நாங்கள் 20ஆம் திகதி பகல் 12மணிக்கு விமானம் ஏறி காசிக்குச் செல்வதாக டிக்கட்டு ஒழுங்கு செய்திருந்தோம். எங்கள் மனதில் ஆற்றொணாத் துயரம் ஏற்பட்டது.

விமான அதிகாரியை அணுகி நாங்கள் எப்படியும் "எவரெஸ்ட்டு போக வழி செய்யுங்கள்" என்று கேட்டோம். அவர் "நாளை காலை வான நிலை சரியாக இருந்தால் விமானம் போகும்" என்றார். நாங்கள் மாமனார் வீட்டிற்குச்சென்று மனைவி அங்கு இல்லை என்று திரும்பிய மருமகனைப்போல வாடி தங்குமிடம் சேர்ந்தோம். நேபாள மன்னரையணுகி அவருடைய தனி. விமானத்தில் எவரெஸ்ட்டு போக முடியுமா என்றும் விசாரித்தோம். அன்று பூராவும் மழைபொழிந்து கொண்டேயிருந்தது.

20-5-76 விடியற்காலை 3 மணிக்கே எழுந்திருந்து பனியையும், குளிரையும் பொருட்படுத்தாமல் குளிர்ந்த நீரில் குளித்து வழிபாடு செய்தோம். காலை 6 மணிக்கு விமான நிலையத்திற்குப் போன் செய்தோம். வான நிலை சரியில்லையென்று பதில்வந்தது. நாங்கள் மதி கலங்கி, கதி கலங்கி ஒன்றுகூடி அப்பர் பெருமான் பாடியருளிய கைலாயப் போற்றிப் பதிகத்தைக் கண்ணீர் ததும்பி, உள்ளம் வெதும்பிப் பாராயணம் செய்துகொண்டிருந்தோம்.

காலை சரியாக 7 மணிக்கு விமான நிலையத்திலிருந்து "வானநிலை சரியாகிவிட்டது. வெயில் காய்கின்றது. நீங்கள் வாருங்கள்" என்று தொலைபேசி மூலம் தகவல் வந்தது. நாங்கள் துள்ளிக் குதித்தோம். வெள்ளிமலைக்காண எல்லோரும் பேருந்து வண்டியில் ஏறி விமான நிலையம் போனோம். நாங்கள் 40 பேரும் விமானத்தில் ஏறினோம்.

காலை 7.30க்கு எங்கள் விமானம் விண்ணில் பறந்தது. இமயத்தில் பல மலைகளைக் கடந்த எங்கள் விமானம் சென்றது. கௌரீ சங்கர் என்ற குன்றையும் விமானத்தில் பறந்துகொண்டே தெரிசித்தோம். முடிவில் எவரெஸ்ட்டைக் கண்டுகளித்தோம்.

எவரெஸ்டு பனிக்கட்டிகளால் வானமளாவி பல கோபுரங்களைப்போல காட்சி அளித்தன. விமானம் எவரெஸ்ட்டை அணுகி மீண்டும் வந்த வழியே திரும்பி காட்மாண்டு வந்து சேர்ந்தது. காலை 8.30 மணிக்கு விமானத்தைவிட்டு இறங்கினோம். மொத்தம் 60 நிமிடம் தான் பறந்தது.

விமானத்தைவிட்டு இறங்கியவுடன் எல்லோரும் காட்மாண்டு நகருக்குள் சென்று பவள விநாயகர், ஜவுளிகள் முதலியன வாங்கிக்கொண்டு ஆகாரமும் செய்துகொண்டு வந்தார்கள். நான் மட்டும் இரண்டொரு நண்பர்களுடன் விமான நிலையத்திலேயே தங்கியிருந்தேன். தேநீர் மட்டும் பருகி ஜெபம் செய்துகொண்டிருந்தேன். பகல் 11-30 மணிக்குப் புறப்பட்டு பகல் 1 மணி சுமாருக்குக் காசியை அடைந்தோம். காசிக்கும் விமான நிலையத்துக்கும் 12மைல் அதிக தூரம். விமான நிலையத்துக்குக் காசியிலிருந்து ராம்குமார் ஜீ முதலிய அன்பர்கள் வந்து மாலையிட்டு வரவேற்பு செய்தார்கள்.

காசியில் கேதாரகாட் குமரகுருபரர் மடத்தில் தங்கி பகல் உணவு செய்தோம். மடத்துச் செயலாளர் கலியாணசுந்தரம்பிள்ளை நன்கு உபசரித்தார். அன்று இரவு ஸப்தரிஷி பூஜையையும், விசுவநாதரையும் தெரிசித்தோம். 21ஆம் திகதி காசியைச் சுற்றிப் பார்த்தோம். 22ஆம் திகதி காலை விமானம் ஏறி கல்கத்தாவை அடைந்தோம். திரு R.சுப்ரமண்ய ஐயர் அவர்கள் எங்களை வரவேற்று சங்கரஹாலில் பெரிய விருந்து வைத்து உபசரித்தார். கல்கத்தாவைச் சுற்றிக்காட்டி உதவி செய்தார். மாலை விமானம் ஏறிச்சென்னை சேர்ந்தோம்.

### பாரிஸ், லண்டன் பயணம்

லண்டன் மாநகரத்தில் முருகன் கோயில் திருப்பணிக்கு உதவுமாறு என்னை, அழைத்தார்கள். இந்தியாவில் பல திருத்தொண்டுகளில் ஈடுபட்டிருக்கிற நான் மேலைநாடு போவதை விரும்பவில்லை. என்னுடைய அன்பர் ஜெமினி R.ராமமூர்த்தி என்னை அணுகி "தாங்கள் அவசியம் மேலை நாடுகளுக்குப் போய்வர வேண்டும். தமிழும் சமயமும் பரவாத அந்த நாடுகளில் தங்கள் தொண்டு இன்றியமையாதது" என்று என்னை வற்புறுத்திப் போகுமாறு எல்லா ஏற்பாடுகளையும் செய்தார்.

26.7.1978 சென்னையில் வழியனுப்பும் விழா நடைபெற்றது. இதற்குச் சிலம்புச் செல்வர் ம.பொ.சி.தலைமைதாங்கினார். M.M.சின்னப்பா தேவர் பொன்னாடை போர்த்திப் பெருமைப்படுத்தினார் தேவரை நான் கடைசியாகச் சந்தித்த சந்திப்பு இதுதான். வாகீச கலாநிதி கி.வா.ஜ.அவர்கள் கண்ணதாசன், S.D.சுந்தரம் சௌந்தரா கைலாசம், A.V. மெய்யப்பச்செட்டியார் முதலிய பல அன்பர்கள் பாராட்டிப் பேசினார்கள். 27-7-78 காலை விமானம் ஏறி பம்பாய் வழியாகப் பாரிஸ் நகரம் சேர்ந்தேன்.

(தொடரும்)

## ஆங்காங்கே துப்பாக்கிச் சூடு வங்கி வாடிக்கையாளர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கிகள் யாவும் நேற்றையதினம் அரைநாளே தமது சேவைகளை வழங்கின. இதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியதாகவும் கூறப்படுகின்றது.

பொங்கல் பண்டிகைத்தினம் நாளை என்பதால் பண்டிகையை முன்னிட்டு மக்கள் பல் நிதி தேவைகளாக நேற்று வங்கிகளில் குவிந்திருந்தனா.

நேற்று யாழ்.நகரில் ஆங்காங்கே இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களால் வங்கிகளுக்கு செல்லவிருந்த மக்கள் தாமதமாகவே சென்றிருந்தனர்.

அவ்வாறு தாமதமாக சென்றிருந்த மக்கள் வங்கிகள் அரைநாளுடன் மூடப்பட்டதால் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியதாக கூறப்படுகின்றது. இதேவேளை, இன்று அரச வங்கி வர்த்தக விடுமுறை என்பது தெரிந்ததே. (க)

## கரணவாயில் குழு மோதல்; மூவர் காயமடைந்தனர்

(துன்னாலை)

கரணவாய் அண்ணாசிலையடி இளைஞர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை பந்துவிளையாடியவேளை அருகிலுள்ள வெற்றுக்காணியில் பந்துசென்றதில் ஏற்பட்டதகராறு கோஷ்டிமோதலாக மாறியது.

இதனால் அ.அன்பழகன் (வயது 41) அ.ஜெகன் (வயது 20) சி.தவராசா (வயது 48) ஆகிய மூவரும் காயமடைந்து மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-101)

## முட்டை விலையில் வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் முட்டையின் விலை திடீரென வீழ்ச்சி அடைந்துள்ளது. நத்தார் புதுவருட பண்டிகைக் காலத்தில் 12ரூபாவாக விற்கப்பட்ட முட்டைஒன்று தற்போது 7 ரூபாவாக விற்கப்படுகின்றது. (க)

## விசேடபிரிவு ஸ்தாபிப்பு

(கொழும்பு)

நீதிமன்றம் சார்ந்த செயற்பாடுகளில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விசேடபிரிவுகள் ஸ்தாபிக்கப்படும் என்று நீதிச்சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்புடன் நாட்டிலுள்ள அனைத்து நீதிமன்ற கட்டடத்தொகுதிகளிலும் இதற்கென பிரிவுகள் நிறுவப்படும். இந்தப் பிரிவுகளின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரிகள் நியமிக்கப்படுவார்கள் என்று சந்திரா ஜெயத்திலக தெரிவித்துள்ளார்.

வழக்கு விசாரணைகளில் ஏற்படும் அநாவசியத் தாமதம், விசாரணைகள் தொடர்பான ஆவணங்கள் காணாமல் போதல் பற்றிய விடயங்கள் பற்றி பொதுமக்கள் முறைப்பாடு செய்யலாம். தொலைபேசி மூலமாகவும் முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

## தகுதி வாய்ந்த பொறுப்பைத் தெரிவுசெய்க -ஜனாதிபதி

(கொழும்பு)

பிரதி அமைச்சர் பதவிகளைக் கொண்டுள்ள அமைச்சர்கள் தமக்குத் தகுதிவாய்ந்த பொறுப்பொன்றை மாத்திரம் தெரிவுசெய்யுமாறு ஜனாதிபதி கேட்டுள்ளார்.

பணிகளை உரியமுறையில் மேற்கொள்வதன் நிமிர்த்தம் இந்த நடவடிக்கை அவசியமென்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் தற்சமயம் அமைச்சரவை தகுதிகளைக் கொண்ட 25அமைச்சர்கள் பதவியில் உள்ளனர். அமைச்சரவை அந்தஸ்துப் பெற்ற 23அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் பதவியைத் தொடருகின்றனர்.

இதேவேளை, 7 அமைச்சர்கள் பிரதியமைச்சர்களாகவும் செயற்படுகின்றனர். (த-9)

## மானிய விலையில் உரம்

வடமராட்சி பிரதேசத்தில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஜனாதிபதியின் தீர்மானத்திற்கமைவாக 350ரூபா மானிய விலையில் உரம் வழங்கப்பட்டு வருகிறது.

வடமராட்சி புலோலி கமநல சேவைநிலையத்தில் 270பேருக்கும், வடமராட்சி கிழக்கு அம்பன் கமநலசேவை நிலையத்தில் 70 பேருக்கும் மானிய அடிப்படையில் உரம் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். பெரும்பாக உத்தியோகத்தர் வி.உருந்திரேஸ்வரன் தெரிவித்தார். இதுவரை மானிய அடிப்படையில் உரத்தைபெற்றுக்கொள்ளாதவர்கள் அவ்வப்பகுதி விவசாய அமைப்பின் சிபார்சுடன் விண்ணப்பிக்குமாறும் மேலும் அவர் தெரிவித்தார். (த-35)

## ஈர்ப்பு விசையினைச் சமன் செய்தலும் வேற்றுக்கிரகங்களில் குடியிருத்தலும்

பௌதீகத்தின் பரிமாணத் தினை மாற்றி அமைத்த விஞ்ஞானிகளாக நியூட்டன் ஜயன்ஸ்டீன், ஹெய்ம் ஆகியோர் விளங்குகின்றனர்,

நியூட்டனின் பௌதீகம் முப்பரிமாணத்துடனும் ஜயன்ஸ்டீன் பௌதீகம் நான்கு பரிமாணங்களையும் அதாவது நீளம், அகலம், உயரம் நேரம் என்பவற்றுடனும் ஹெயம் இன் பௌதீகம் ஆறுபரிமாணங்களையும் அதாவது மேலதிகமாக ஈர்ப்புலம் , மின்காந்தப் புலம் என்பவற்றினையும், கொண்டுள்ளது .

தற்போது விண்வெளி விஞ்ஞானிகளின் சிந்தனை எவ்வாறு மிக விரைவாக மாற்றுக்கிரகங்களுக்கு செல்வது என்பது பற்றிய ஆய்விலேயே சென்று கொண்டிருககிறது. ஈர்ப்புப் புலத்தினை மின்காந்தப் புலத்தினால் சமன் செய்யும் விண்கலங்கள் மூலம் இதனைச் சாதிக்கலாம். இதற்கான விசேட விண்கலங்களில் மின்காந்தப் புலத்தை உருவாக்கும் வளையங்கள் அமைக்கப்படும்.

இன்று விமானமூலம் பூமியின் கிழக்கில் இருந்து மேற்கே செல்லும் போது எவ்வாறு நேரமாற்றம் இல்லாது இருக்கின்றதோ அவ்வாறே சம நேரத்தில் வேற்று கிராகங்களுக்கு செல்லல் குறிப்பாக மனிதர் உயிர்வாழக் சாத்தியமான கிரகங்களிற்கு செல்லல் சாத்தியமாகும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

டாக்டர் சி.யமுனாநந்தா

# புத்தாண்டுப் பலன்கள் உங்களுக்கு எப்படி?

(தொடர்ச்சி....)

## பன்னிரு இராசிகளுக்கும் ஜூலை மாதத்துக்குரிய பலன்கள்

| | | | |
|---|---|---|---|
| ரா | | சு | சூ பு |
| | ஜூலை ராசி நிலை | | சனி செ |
| | | | சந் |
| | | குரு | கே |

### மேடம்
**(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1)**

உங்கள் சுக இல்லமான கடகத்தில் நீசமான செவ்வாயுடன் சேர்ந்த சனி உங்களை தவறு செய்ய வைத்துவிடும். இது எதிர்பாராமலேயே உண்டாகும். சிறு சிறு நிகழ்ச்சிகளும் காரணமாக இருக்கும். சுப விஷயம் குறித்து எதிர்பார்த்த கடிதம் அனுகூலமாகவே இருக்கும். சுற்றத்தார் இல்லம் சென்று விருந்து கொள்வது வேடிக்கை கேளிக்கை அனுபவிப்பதும் உண்டாகும். செய்தொழில் வகையில் உங்களுக்கு எதிர் சவாலாக இருந்தவர்களையும் இப்போது காணவில்லை. அவர்கள் மறைந்துவிடுவர். நீங்கள் எதையும் யோசிக்காமல் செய்யமாட்டீர்கள். இப்போதும் அதனை உங்கள் கோணத்திற்குத் திருப்பிப் பார்ப்பதே சிறந்தது. அந்த வகையில் நீங்கள் ஆரம்பம் செய்த தொழில் வழி பிரகாசமான நிலையைப் பெற்றிடும் பழைய செயல்கள் சில புதிய முயற்சிக்கு ஊக்கமளிக்கும். தொழில் பிரிவுகூட அவசியமாகத்தான் இருக்கும். பிரயாணம் மேற்கொள்வது திருப்தியாக இருக்கும். கடமைகளைச் செய்ய தடைகள் இருக்கின்றன. கவனமறதி மனதை ஒருநிலைப்படுத்த முடியாமை என்பது அதிகமாக இருக்கிறது. இதனால் உரிய காலத்தில் உரியன செய்ய முடியாது. எழுத்து ஒப்பந்தம் போன்றவைகளும் கான்ட்ராக்ட் தொழில் உள்ளவர்களுக்கு சிக்கலாகவே இருக்கிறது. உங்கள் அவசரத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகி வரும். அரசியல் அரசாங்க மனிதர்களின் சந்திப்பு குடும்ப காரியங்களை நிறைவேற்றப் பயன்படும். சில வழிகளில் கூட்டுமுயற்சி குறித்தபடி நிறைவேற்ற முடியாமல் தள்ளிப்போய்விடும். இப்போது உங்கள் திறமை நேர்மையைச் சோதிக்கும் வாய்ப்பு உள்ள மாதமாகும். வழக்கு வகை திருப்பம் வேடிக்கையாக அமையும். உங்கள் வார்த்தைகளைக் காப்பாற்ற சாதாரண முயற்சிகளே போதும். பணவரவு வேண்டியது உரிய காலத்தே வந்தாலும் செலவழிக்கும் வழிகள் தன்னம்பிக்கையோடு செயல்பட்டாலும் மூன்றாவது மனிதர்கள் உங்களை குழப்பத்திற்கு உள்ளாக்கிவிடுவார்கள். அன்பும், பண்பும் நிறைந்தவர்களாக இருப்பீர்கள். காதல் கல்யாணம் சம்பந்தமான முயற்சியும் இனிமை தருவதாக இருக்கும். வியாபாரிகள் புதிய ஒப்பந்தத்தை பெறுவது தன ஆதாயமும் குறிப்பிடத்தக்கது. விஷ எல்லை சுழி காலமே என்பதால் பயம் வேண்டாம். பெருமை பேச்சுக்கள் அதிகமாக இருக்கும். கணவன், மனைவி உறவு திருப்தியானதே. தனித்து இயங்குவதை விட்டு கூட்டு முயற்சி கணிசமான நன்மைகளைச் செய்யும். உயர் அதிகாரிகளால் உங்களுக்கு இடையூறுகள் தான் மிஞ்சும். ஏழரைச்சனி என்பதால் நீங்கள் இனித்தான் எச்சரிக்கையுடன் செயல்படவேண்டும். உங்களுக்கு கேந்திர சாரத்தில் செல்பவன் இந்தச் சனி. ஒரு வழியில் நீங்கள் தவறு செய்தவராகக் கருதப்படுவீர்கள்.

### ரிஷபம்
**(2,3,4 கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் 1, 2)**

நன்மைகள் தொடரும் என்பதில் சந்தேகமில்லை. பிறப்புகால திசையும் ஒத்துழைப்பு நல்கினால் நீங்கள் லட்சம் பொன்னுக்கு உரியவர் ஆவீர். பெண்களுக்கு பட்டாடைகள், ஆபரணச் சேர்க்கையும் உண்டாகும். அரசாங்க உயர் அதிகாரிகள் முதல் அரசியல்வாதிகளும் நட்பு உடையவர்களாக விளங்குவர். கிரக அமைப்பு சீராக அமைந்து இருப்பதால் சில சிக்கலான பிரச்சினைகளும் எளிதில் முடியும். பாராட்டுக்களை பெறக் கூடியவராக இருப்பீர்கள். பெண்கள் கலைப் பிரிவினர்களால் சில நன்மைகள் இருக்கின்றன. தனவரவு அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும். குடும்பத்தில் சுப விஷயம் குறித்து பேசுதல் கடிதத் தொடர்பு கௌரவம் முக்கிய அங்கம் வகிக்கும். வழக்கு கடன் பிரச்சினைகள் இருந்தும் வேகமில்லாமல் இருக்கிறது. பழைய நண்பர்கள் மூலம் பயனுள்ள தகவல்களை பெறுவதும் இருக்கும். மேலும் சனி இப்போது பல மற்றவன் இனி எவ்வித சிரமமும் செய்ய முடியாதவனாகும். கடந்த மாதத்தைவிட இது முன்னேற்றக் காலம் என்பதில் சந்தேகமில்லை. கடன் வழக்கு இருப்பவர்களும் இந்தப் பிரிவில் உண்டு. ஆனால் பாதிப்பு கொடுக்காது. உங்கள் எண்ணம் முயற்சிகளுக்கு வெற்றி நிச்சயம் இருக்கிறது. காரணம் யோக கிரகமாக செவ்வாய் சுயக்ஷேத்திரம் பெற்றிருக்கிறான். உடல் உஷ்ணத்தை மிகுதியாக்கும் இதே பலன்கள் இருக்கும் என்றாலும் தூக்கமின்மை செய்வதையும் தவிர்க்க மாட்டான். புதன் இருப்பது தெய்வ வழிபாடு ஸ்தல பிரயாணம் நல்ல திகதிகளில் சென்று நியாயமான காரியங்களை முடிக்கவும். விருந்துக்கு போகும் இடங்களில் வெட்டிப் பேச்சைத் தவிர்க்கவும். வடக்கு, வடமேற்கு திக்கு நண்பர்கள் வெகுவாக நன்மையைச் செய்பவர்களே. திடீர் பிரயாணம் இல்லாமல் இல்லை. சிலர் இயந்திரம் வாகனம் வாங்குவதும் இருக்கும். குழந்தைகள் ஆரோக்கியம் கல்வி இந்தவகையில் திருப்தியாக இருக்கின்றன. குடும்ப சொத்து சம்பந்தமாக செய்யும் முயற்சிகளில் வெற்றி இருக்கின்றன. வழக்கும் கடனும் வீரமழிந்து காணப்படுகின்றன. தைரியமாக செயல்படுங்கள். வெற்றி உங்கள் பக்கம்தான். செய்தொழில் வகையில் உங்களுக்கு எதிர் சவாலாக இருந்தவர்களையும் இப்போது காணவில்லை. அவர்கள் மறைந்து விடுவர். நீங்கள் எதையும் யோசிக்காமல் செய்யமாட்டீர்கள். இப்போதும் அதனை உங்கள் கோணத்திற்கு திருப்பிப் பிரகாசமான நிலையைப் பெற்றிடும். நண்பர்கள் இல்லத்திற்கு விருந்தினராகச் செல்வீர்கள். நாகரிக வாகனம் வாங்குவது போன்ற நன்மைகளும் இருக்கின்றன.

### மிதுனம்
**(மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3)**

இது சுக இல்லத்தில் அமையப் பெற்ற கேது மட்டும் அல்ல என்பதோடு பாதத்தில் பலமாக அமர்ந்து இருக்கும் கழிவு கால சனியாக இருப்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். சில காரியத்தை சிலசமயம் மூன்றாவது மனிதர்கள் கூடிப்பேசி சுமூகமான சூழ்நிலையை உருவாக்கத் தக்கதாக இருக்கும். சொல்லைக் காப்பாற்ற முடியாமை, தூக்கம் குறையும். ஆரம்ப நாளில் இருக்கும் பண வகையில் மற்றவருக்கு வேண்டிய ஈடுபாடும் அலைச்சலும் உண்டாகும். தொழில் வழியில் எவ்வளவுதான் வேகம் இருந்தாலும் ஆதாயம் குறைவுதான். அலைச்சல், அகால உறக்கம், தேக உஷ்ண அசௌகரியம் உண்டாகும். அரசாங்க உயர்மட்ட மனிதர்களின் சந்திப்பு அவசர பிரச்சினைகள் முடிப்பதற்கு அவசியமாக இருக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகள் பிரகாசமாக இருக்கிறது. பல நெருக்கடி இருந்தலும் காரியத்தடை இல்லை. முடிவு செய்த காரியத்தையும் கடைசி நேரத்தில் தள்ளிப்போட வேண்டி இருக்கும். நாகரிக வாகனச் செலவு வழக்கு வழி செலவுகளும் உண்டாகும். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு நம்பிக்கை தரும் நன்மைகள் இருக்கின்றன. காதல், கல்யாண முயற்சி ஆபரணங்கள் வாங்குவது இரகசிய கடிதம் எழுதுவதும் இருக்கின்றன். இயந்திர தொழில் வாகனம் வைத்து தொழில் நடத்துகிறவர்களுக்கு பிற்பகுதியில் எடுத்த காரியமெல்லாம் வெளி வேகமான போக்கும் இருக்கும். அரசியல் வாதிகளுக்கு பிரச்சினைகள் மாதம் ஆரம்பத்திலிருந்தே விட்டுவிட்டு இருக்கும். குழந்தைகள் வகை சீதள பாதிப்பு மருத்துவச் செலவுகளும் உண்டாகும். மேலும் கௌரவ உயர்வு இருக்கும். இப்போது சிலர் பூமிப் பொருள் விற்று கட்டு மனையில் செலவிடுதல் போன்றவை இருக்கும். தொழில் வழி அலைச்சல் மட்டும் இன்னும் உங்களை விடவில்லை. காலம் கடந்து உணவு கொள்வது, அகால உறக்கமும் இருக்கும். இதனால் ஆரோக்கிய பாதிப்பு உண்டாகி மருந்துண்பதும் இருக்கலாம். மலை, வனம் சூழ் பிரதேச மனிதர்களின் தொடர்பு நெருங்கியதாக இருக்கும். கடன் மனிதர்களின் தொடர் நெருங்கியதாக இருக்கலாம். கடன் வகை சில சமயம் கடுமையான சூழ்நிலையை உருவாக்கக்கூடும். உங்கள் கௌரவத்தைக் காக்க இதை சீர் செய்வது அவசியமாகும். எனவே உங்களுக்கு ஆகாதவர்களின் செயல்கள் வேகமாக இருக்கிறது. கணவன், மனைவி உறவு சுமூகமாகிவிடும். குழந்தைகள் வகை ஆரோக்கியத்தில் மிகவும் முன்யோசனையுடன் நடந்துகொள்ளவும். நண்பர்கள், உறவினர்கள் இல்லம் சென்று வருதல், விருந்து உண்பதும்கூட இருக்கும். பெண்கள் வயிற்றுக் கோளாறு மருத்துவ சிகிச்சை பெறுவதும் கூட இருக்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு இடமாற்றம் என்ற பிரச்சினை தீராது. சில சமயம் முக்கியஸ்தர்களை சந்திக்க வேண்டியும் இருக்கிறது. அரசியல் மனிதர்கள் பிறரால் குறை கூறப்படுவர். சிலர் நாகரிக வாகனம் விற்பது மாற்றி அமைப்பதும் உண்டாகும். நீங்கள் வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைப்பட தவர் அல்ல என்றாலும் இக்காலம் முக்கியஸ்தர் மூலம் முயன்ற தொழில் சம்பந்தமாக உங்கள் புதிய முயற்சிகள் திருப்திக்குரிய அளவு இல்லை.

### கடகம்
**(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)**

திருமண சம்பந்தமான கடிதப் போக்கு வரவு இனிமையான செய்தியை தாங்கி வரும். சகோதர வகை மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளும் இருக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற ஈடுபாடுகள் மூலம் பாராட்டும் பரிசும் கிடைக்கும். உத்தியோகப் பிரிவினருக்கு சிறு இலாகா மாற்றம் மூலம் தனம் பெறுபவர்களுக்கு இடமாற்றம் போன்றவை உண்டாகும். விவசாயம் மூலம் தனம் பெறுபவர்களுக்கு இப்போது கைப்பிடியாக இருக்கும். குடும்பத்தில் அதிகமான செலவுகளை ஏற்கவேண்டி இருந்ததால் சில வகையில் கடுமையான நெருக்கடி இருக்கவே செய்யும். தொழில்வழியில் எப்படியோ கௌரவம் காக்கப்பட்டுவிடும். பெண்கள் வகையினால் ஏற்பட்ட பாதிப்பு அவர்கள் மூலம் தீர்க்கப்படும். தொழில் வழியில் கொடுக்கல், வாங்கல் ஒரே சீராக இல்லை என்றாலும் முழுவதும் பாதிக்கப்படமாட்டாது. இப்போது வளர்ந்துகொண்டே வரும் வழக்கு, கடன் சம்பந்தமான பிரச்சினைகள் கட்டுப்பட்டதாகவும் திருப்தியளிப்பதாகவும் இருக்கின்றன. புத்திர, புத்திரியர்கள் கல்வி ஆரோக்கியம் இந்த வகை மகிழ்ச்சிக்குரியதாகவே இருக்கிறது. பகைத்துக்கொண்டவர்களால் நன்மையுண்டு. பழைய காரியங்களை முடிக்கப் புதிய முயற்சிகள் பிறரால் பாராட்டையும் உதவியையும் உண்டாக்கும். கணவன் - மனைவி உறவு திருப்தியாகவே இருக்கும் என்றாலும், மனைவிக்கு உஷ்ண சம்பந்தமான வலிகள் தோன்றிவிடும். கவனம் தேவை. உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு உயர் அதிகாரிகளால் விருதும், பாராட்டுக்களும் உண்டாகும். அரசியல் நண்பர்கள் மூலம் தொழில் ஆதாயத்தை பெறுவீர்கள். இது அமைப்பான காலம். வெளிவட்டாரத்தினர் வரை உங்கள் செயல்முறைக்கு இணக்கமான நிலைக்கு வந்துவிடுவர். பயம் இல்லை. சனியை விட பலம் மிக்கவர்கள் இந்த ராகுவும், கேதுவும். குடும்ப உறவினர்களில் நல்ல செலவுகள் இடம் பெறுவதுபோல் துற்கரும செலவுகளும் இடம் பெறும். பிரயாணம் உடனுக்குடன் உண்டாவது உடல் ஆரோக்கியத்தைப் பாதிக்கும். உஷ்ண நோய் பாதித்து குணமாகும். செலவுகள் அதிகம் இருந்தபோதிலும் செய்தொழில் பாதிக்காது. மாணவ, மாணவிகள் மேல்நிலை படிப்புக்கோ, தேர்வுக்கோ அயல்நாடு செல்லும் அவசியம் உருவாகும். செவ்வாய் வக்கிரமாக இருந்தாலும் உங்கள் கௌரவ இல்லத்தில் இருப்பதால் பூமி, வீடு, நிலம் போன்ற அசையாப் பொருள் பேரத்தின் மூலம் தன ஆதாயத்தைப் பெறுவீர். குரு பலத்தால் நீங்கள் குறித்த இலக்கை அடைந்துவிடுவீர்கள். பயப்படவேண்டாம். உறவினர், நண்பர்கள் அடிக்கடி வந்து போவதால் குடும்பத்தில் அதிகமான செலவுகள் இருக்கும். குழந்தைகளின் முன்னேற்றம் உங்கள் முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும். தொழில் ஸ்தாபன வகையில் இப்போது உங்கள் முன்னேற்றம் படிப்படியே உயர்ந்துகொண்டே வரும் என்பதில் சந்தேகமில்லை. உடனிருப்பவர் கூட்டு மனிதர்களின் போக்கு மனத்திருப்தி அளிப்பதாக இருக்கும்.

### சிங்கம்
**(மகம், பூரம், உத்தரம் 1)**

உறவினர் சந்திப்பு சுப விஷயம் குறித்து பேச முடிவு செய்யவும் வழிவகை செய்யும். கணவன், மனைவி உறவு கவர்ச்சியாகவே இருக்கும். உத்தியோகப் பிரிவினர்களுக்கு இப்போதுதான் கிரகங்களின் எல்லை அனுகூலமாக வந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. சகோதர, சகோதரி வகை மனத்திருப்தியளிக்கும் அளவு திருப்பம் பெற்றிருக்கின்றன. பழைய கடன்கள் இப்போது அடையாது என்றாலும், பாதிப்பு கொடுக்காது. வழக்கும் அப்படியே. புதிய தொழில் ஆரம்பத்திற்கு வேண்டிய அனுகூல சூழ்நிலை இப்போது உருவாகி வருகின்றன. கொடுக்கல், வாங்கலில் நீங்கள் உங்களைவிட பெரிய மனிதர்கள் தொழில் முக்கியம் வாய்ந்தவர்களை எல்லாம் சந்திக்க வைத்துவிடும். குடும்ப தலைகள் நெருக்கடியில் தான் பூர்த்தி செய்யப்படுகிறது. சில வகை கூட்டு முயற்சியும் பலன் தரும் அளவுக்கு உருவாக்கப்பட்டு வரும். உங்கள் சத்ருக்கள் இப்போது பலம் குன்றியவர்களாக ஆகிவிடுவர். வழக்கு பயம் வேண்டாம். வார்த்தைஙய குறித்தபடி காப்பாற்றி விடவும் முடியும். வேண்டாதவர்கள் சிலரையும் இப்போது சந்திக்கவேண்டிய அவசியம் உண்டாகும். முற்பகுதி தனவரவு உண்டு. வெளிவட்டாரத்தினர் உதவியாக இருப்பது போல் உறவு வழி இல்லை. செய்தொழில் வழி பிடிப்பாகத்தான் இருக்கும். சகோதர, சகோதரி வகையில் முக்கிய செலவுகள் இருக்கும். விளையாட்டுப் போன்ற வகையும் பாராட்டுக்களை கொடுக்க வல்லது. உங்களுக்குச் சாதகமாக அமைந்திருக்கும் மனைவி அல்லது கணவனுக்கு ஆரோக்கிய பாதிப்பு, மருந்து செலவுகளும் இருக்கச் செய்யும். இந்த நிலை தொடர்ந்து இருக்காது. பின்பு உறவினர்களும் உறுதுணையாக நிற்பர். கொடுக்கல், வாங்கலில் சுமூகமான நிலையே இருக்கும். தூரத்து மனிதர்கள் அல்லது தொடர்பு அனுகூல நிலையிலேதான் இருக்கின்றன. தனவரவு இஷ்டத்தை நிறைவேற்ற உதவியாக இருக்கும். மூன்றாவது மனிதர்களின் தொடர்பு முயற்சிக்கு ஊக்கமளிக்கும். இயந்திரக் கருவிகள் வாங்குவது அல்லது வாகன சித்தியும் உண்டாகும். விவசாயிகளுக்கு வளமான பூமி சித்தியும் உண்டாகும். புண்ணிய ஸ்தல பிரயாணமும் மகிழ்ச்சியும் உண்டு. அரசாங்க மனிதர்களின் தொடர்பு தொழில் வகை முயற்சிக்கு துணையாக நிற்கும். பழைய மனிதர்கள் சிலர் உங்களை விட்டு விலகி இருந்தவர்கள் மீண்டும் சேருவர். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்கள் மிகவும் எச்சரிக்கை எடுத்துக்கொள்ள வேண்டிய மாதம். அவதூறு வார்த்தைகள், கவனமறதி கடிதத்தால், பாதிப்பு கண்ணியக் குறைவு போன்றவைகளும் உண்டாகும். கட்டடம் கட்டுவது குறிப்பிடத்தக்க நல்ல பலன்களாகும். செம்பொன் ஆபரண சேர்க்கை, இந்த ராசிப் பெண்களுக்கு சித்திக்கும். குடும்பத் தேவைகள் குறித்தபடி பூர்த்தியாகும்.

### கன்னி
**(உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2)**

உங்களுக்கு எதிராக இருந்தவர் இப்போது ஒத்துழைப்புக் கொடுப்பர். மறைமுக சத்ருக்களும் இருக்கின்றனர். பெண்களுக்கு குடும்பத்திற்கு நாகரிக பொருள் சித்தி, சந்தோஷ செய்தியைப் பெறுவதும் உண்டாகும். சிலர் வாகனத்தைப் புதுப்பித்தல், இயந்திரக்கருவிகள் வாங்கல் என்பன இடம்பெறும். பெண்கள் உடல் நலத்தில் கவனம் எடுத்துக்கொள்வது அவசியமாகும். தூரத்துக் கடிதம் இனிமையான செய்தியைத் தாங்கி வரும். தொழில் செய்பவர்கள் கீழ்மட்ட மனிதர்களின் பேச்சு, செயல்களும் ஒத்ததாக இல்லை. நீங்கள் சில வகையில் சோர்வு உடையவர்கள் தான் என்றாலும் செய்தொழில் இல்லற வகையில் இன்பமான போக்கு தொடர்ந்து இருந்து வரும். செய்தொழில் வழியில் சில புதிய யுக்தியைக் கையாள்வது மற்றவரால் பாராட்டப்படுதலும் இருக்கிறது. இந்த நேரத்திலும் நீங்கள் சற்றுக் கூடுதலாக அலைச்சலை மேற்கொண்டு இருக்கிறீர்கள் என்றால் அதற்குக் காரணம் காரிய சாதனையும், அடுத்தடுத்து இருப்பதால் தான் குடும்பத்தில் ஒரே சீரான போக்கு இருக்கிறது. முன்பு விலகி இருந்தவர்கள் இப்போது உங்களுடன் சேர்ந்து செயற்படுவர். முன்பு தொடர்ச்சியாகச் செய்த காரியங்கள் சில தடைப்பட்டது இப்போது பூர்த்தியாகிவிடும். கலைத்துறை ஈடுபாடும் தடைப்பட்டது இப்போது பூர்த்தியாக்கப்படும். பாக்கியத்து சனி பழைய வாகனம் வாங்குவது அல்லது புதுப்பிப்பதும் மிக முக்கியம் வாய்ந்ததாக இருக்கும். நல்ல மனிதர்கள் சிலரை கூட்டாகச் சேர்த்து ஒப்பந்தம் போன்ற நன்மைகள் சிலதும் உண்டாகும். பழைய கடனில் ஒரு பகுதி கழிக்க நேரிடும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்றவற்றில் பாராட்டுக்கள் கிடைக்கும். வழக்கு பாதிப்புக் கொடுக்காது கணவன் - மனைவி இடையில் சிறு பூசல் உதயமாகும். காரணம் மூன்றாவது மனிதரே. சூழ்நிலை அமைதியாக இருக்கிறது. குழந்தைகள் ஆரோக்கியம் கல்வி நிலையும் திருப்திகரமாக அமையப் பெற்றிருக்கிறது. சிலர் நாகரிக வாகனச் சேர்க்கையைப் பெறுவர். நல்ல நண்பர்களைப் பெறுவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். புண்ணிய ஸ்தல பிரயாணமும் உண்டாகும். எழுத்து வகையில் அயல்நாட்டுத் தொடர்பு பாதிக்கத்தக்கது. வர வேண்டிய பணம் ஓரளவு படிப்படியே வந்து சேரும். நீங்கள் கொடுக்க வேண்டிய இடத்திலும் வார்த்தையைக் காப்பாற்றி கௌரவமும் பெறலாம். எழுத்து மூலியத்தில் நன்மைகள் வந்தபோதிலும் அவை நடைமுறைக்கு வருவதில் தடைகள் இருக்கின்றன. குடும்ப உறவினர் இப்போது முழுத்திருப்தியுடன் எதிலும் செயல்படமாட்டார்கள். பழைய கடன்கள், வழக்கு அப்படியே இருந்தாலும் பாதித்து விடும் என்ற பயம் வேண்டாம். ஒரு வகையில் நீங்கள் தைரியம் உடையவராக திகழ்வீர்கள். முதலீடு செய்வதிலும் முக்கியத்துவம் கொடுக்க மாட்டீர்கள். குடும்ப முன்னணி திருப்தியாகவே இருக்கிறது.

(தொடரும்...)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

17 மீள்பார்வை


'திரிசூலம்' படத்தில்...(1979)

நாங்களும் சாமான்களை விட்டுவிட்டு, அம்போ என்று பொள்ளாச்சி வந்துவிட்டோம்.பொள்ள்ச்சியில் எங்கள் நாடகக் கம்பெனி பார்ட்னர்களான செட்டியார்களுக்கும், ராதா அண்ணனுக்கும் கொஞ்சம் பணத்தகராறு வந்துவிட்டது. ஆகையால் நடிகவேள் அவர்கள், அவர்களை விட்டு விலகி, வேறு ஊர் செல்ல ஆரம்பித்துவிட்டார்.

அப்படி வேறு ஊர் போகும் போது எங்களை எல்லாம் கூப்பிட்டார்.'ஏம்பா நீங்கள் எல்லோரும் இங்கேயே இருக்கின்றீர்களா? என்னுடன் வருகிறீர்களா?' என்று கேட்டார். நாங்கள் பதில் சொல்ல முடியவில்லை. கம்பெனி பார்ட்னர்கள் பதில் சொன்னார்கள். 'பசங்களெல்லாம் இங்குதான் இருப்பார்கள் நீங்கள் போகலாம்' என்று கூறிவிட்டனர்.

ஆகையால் ராதா அண்ணன் மிகவும் வருத்தமாக எங்களை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டார். சரஸ்வதி கானசபாவில், கிருஷ்ணபிள்ளை என்று ஒருவர் இருந்தார். அவர் கேரளாவைச் சேர்ந்தவர். அந்த கிருஷ்ணபிள்ளையின் தலைமையில் எங்களைக் கேரளாவுக்கு அனுப்பி வைத்தார்கள். கேரளாவில் பாலக்காட்டில் வந்து நாங்கள் இறங்கினோம்.

### நாடக வாழ்க்கை ஒரு வழுக்கு மரம்

டி.எஸ்.என்: அப்பொழுதெல்லாம் இப்போதைய கேரளா, தமிழ்நாடு எல்லாம் ஒரே மாநிலங்களாக இருந்ததல்லவா ?


'சித்தூர் ராணி பத்மினி' படத்தில்...(1963)

சிவாஜி: உண்மைதான். அப்போது கேரளாவிலும் தமிழ் நாடகங்களும், மலையாள நாடகங்களும் நடக்கும். உதார ணத்துக்கு நவாப் ராஜமாணிக்கம் பிள்ளையின் கம்பெனி அப்போது பிரபலமாகியிருந்தது.

டி.கே.எஸ் பிரதர்ஸ் கம்பெனி நாடகங்களும் நடந்தன. அவர்களெல்லாம் தனித்தனியாக நாடகம் நடத்தியது போல, எங்களுடைய நாடகக் கம்பெனி நாடகங்களும் பாலக்காடு, நம்மாரா , வில்லங்கி, கொல்லங்கோடு ஆகிய இடங்களில் நடந்தன. கொல்லங்கோட்டிற்குச் சென்ற பிறகு தான் எனக்கு நாடகத்தில் திடீரென்று ஒரு பிரமோஷன் கிடைத்தது. நான் பெண் வேஷத்திலிருந்து ராஜபார்ட் வேஷத்தில் மனோகரனாக நடிக்க வாய்ப்புக் கிடைத்தது.

டி.எஸ்.என்: உங்களுடைய ராஜபார்ட்டுக்கு எத்தகைய பாராட்டுக்கள் கிடைத்தது?

சிவாஜி:கொல்லங்கோடு மகாராஜா ஒரு பெரிய கலா ரசிகர். தினமும், நாடகத்திற்கு வந்து, என்னை மிகவும் பாராட்டுவார்.ஒருநாள் எனக்கு பெரிய வெள்ளித்தட்டு ஒன்றைப் பரிசாகக் கொடுத்தார். ஒரு நான்கு, ஐந்து அடி இருக்கும் அந்தத் தட்டு. 'அந்த வெள்ளித்தட்டை இப்போது காண்பியுங்கள்' என்று கேட்டுவிடாதீர்கள்.

ஏனென்றால் அதை அப்பொழுதே விற்று தீர்த்துவிட்டார்கள் எங்கள் முதலாளிகள்.அவ்வளவு கஷ்டம் எங்களுக்கு. சாப்பாட்டிற்கே பணமில்லாதபோது, வெள்ளித் தட்டை விற்கும்படியாகிவிட்டது. எனக்கு வெள்ளித் தட்டை விற்றது பற்றிக் கவலையில்லை. எனக்குப் பரிசாகக் கிடைத்த வெள்ளித்தட்டை விற்றதினால், நூறு பேர் நான்கு நாட்கள் சாப்பிட்டார்கள். அந்த திருப்திதான் எனக்குப் பெரிதாக இருந்தது.

அந்த நாளில் 'நாடக வாழ்க்கை ஒரு வழுக்கு மரம் ஏறுவது மாதிரி'மேலே ஏறுவது வழுக்கிக் கீழே வருவது, இது எங்களுக்கு சகஜம். உறியடித் திருவிழாவில் வழுக்கு மரம் ஏறுவதும் அப்படித்தானே. மறுபடியும் எங்களுக்குக் கஷ்டம் வந்துவிட்டது. அப்போது நாடகத்தையே நிறுத்தும் படியாக வந்துவிட்டது. நாடகத்தை நிறுத்திவிட்டார்கள். ஒரு மாத காலமாக நாடகமும் நடக்கவில்லை சாப்பாட்டிற்கு என்ன செய்வது?

ஊரைச் சுற்றி, வயல்காட்டில் தோட்டத்துப் பகுதியில் சேனைக்கிழங்கு விளைந்திருக்கும். அவற்றையெல்லாம் தோண்டி எடுத்து, அதை வேகவைத்து, உப்புப் போட்டுச் சாப்பிட்டோம். சாப்பாடு இல்லை. சேனைக்கிழங்கை உப்பு போட்டு சாப்பிடுகிற நிலமை எங்களுக்கு. கொஞ்சம் யோசனை செய்து பாருங்கள். எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன்? என்று.

### துயரம் மிக்க பயணம்

டி.எஸ்.என்: இவ்வளவு கஷ்டத்திலும் கூட உங்களுக்கு நாடகத்தை விட்டுவிட்டு, வீட்டுக்குப் போய் விடலாம் என்று தோன்றவில்லையா?

சிவாஜி: தோன்றவில்லை. ஆனால், கொல்லங்கோட்டை விட்டுப்போக வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. கம்பெனியில் என் நெருங்கிய நண்பன் ஒருவன் இருந்தான். பெயர் தங்கவேலு. அவனைப் பார்க்க ஊரிலிருந்து அவன் தாயார் கொல்லங்கோட்டிற்கு வந்திருந்தார்கள். பிள்ளைகள் கஷ்டப்படுவதைப் பார்த்துச் சகிக்காமல், எப்படியாவது அங்கிருந்து சென்றுவிடலாம் என்று என் நண்பனுடைய தாயார் நினைத்தார்கள்.

அந்த அம்மாவிற்கு வேண்டியவர்கள், பொள்ளாச்சியில் இருந்தார்கள். பொள்ளாச்சி போய், அவர்களிடம் உதவி வாங்கிக் கொண்டு, திருச்சிபோய்விடலாம் என்று நினைத்தார்கள். நானும் தங்கவேலுவுடன் புறப்பட்டேன்.வேறு ஒரு பையனும் கூட வந்தான்.

(தொடரும்)

# வறிய மாணவர்களுக்கு விசேட புலமைப் பரிசில்

(கொழும்பு)

இடைநிலைக் கல்வியை நவீன மயப்படுத்தும் திட்டத்தின் கீழ் அரசாங்கப் பாடசாலைகளில் தரம் 10 வகுப்புகளில் கல்வி பயிலும் வறிய' மாணவர்களுக்கு விசேட புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் திட்டப்பணிப்பாளர் அனுரா திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

இக் கொடுப்பனவு வழங்குவது தொடர்பாக விண்ணப்பப் படிவம் வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக் கொடுப்பனவுகளை பெறவிரும்பும் மாணவர்கள் உரிய விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்த வலயங்களுக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இதன் அடிப்படையில் 24ஆயிரம் ரூபாவிற்கும் குறைவான வருடாந்த வருமானத்தைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி அமைச்சின் சிசுசவிய புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் 500ரூபா வீதம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-2)

# ஏப்ரல் 15ஆம் திகதிக்குள் உள்ளூராட்சி சபைத் தேர்தல்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சி சபைகளுக்காக கோரப்பட்ட நியமனப் பத்திரங்கள் அனைத்தையும் இரத்துச் செய்யும் வகையிலான சட்டமூல மொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி தலைமையில் கூடிய போது இதற்கான அங்கீகாரம் கிடைத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் 71 உள்ளூராட்சி மன்றங்கள் செயற்படுகின்றன. இதில் 53 மன்றங்களுக்கே நியமனப்பத்திரங்கள் கோரப்பட்டிருந்தன.

எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் இந்தச் சட்டமூலத்தை கொண்டுவந்து அதற்கு அங்கீகாரம் பெறுவதற்கும் இதன் பின்னர் நாட்டின் உள்ளூராட்சி சபைகளுக்கு ஒரே நாளில் தேர்தல்களை நடத்துவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

நாட்டில் தற்சமயம் 311 உள்ளூராட்சி மன்றங்கள் இயங்கிவருகின்றன. இதனைத் தவிர 25 உள்ளூராட்சி மன்றங்கள் புதிதாக உருவாக்கப்படுவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத்தேர்தல்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட வேண்டும் என்ற நிலையில் மார்ச் இறுதிக்குள் தேர்தல்கள் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-9)

# வலு வீண்விரயமாகும் துறைகளை இனம்கண்டு அவற்றை தடுக்கவேண்டும்

(கொழும்பு)

வலு வீண்விரயமாகும் துறைகளை இனங்கண்டு அவற்றைத் தடுக்கக் கூடிய நடவடிக்கைகளை உடன் எடுக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலம் பெருமளவு பணத்தைச் சேமிக்கக்கூடியதாக இருக்கும் என மின்சக்தித்துறை அமைச்சர் டபிள்யூ. டி.ஜே. செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துத் துறையில் மாத்திரம் 20 சதவீத எரிபொருள் விரயம் இனங்காணப்பட்டுள்ளது.

இதனைத் தடுக்கும் நோக்கில் திட்டமிட்ட வீதிவலைப்பின்னலை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது என அமைச்சர் குறிப்பிட்டார்.

தொழிற்சாலைகளிலும் மின்வலு வீண் விரயமாக்கப்படும் தருணங்கள் அதிகமாகும்.அவற்றில் ஒழுங்கான மின்வலு முகாமைத் திட்டங்கள் அமுல் செய்யபட்டால் பெருந்தொகைப் பணத்தை மீதப்படுத்திக் கொள்ள முடியும் என்பதையும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (க-7)

# மிதிவெடி அகற்றும் பணி ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் மிதிவெடி அகற்றும் பணியை மேற்கொண்டு வரும் ஹலோ டிரஸ்ட் நிறுவனம் மீண்டும் கடந்த 9ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

ஊர்காவற்றுறை முன்னைய அஞ்சலகம் இருந்த கட்டடப் பகுதி, கரம்பன் அதன் முன்பாகவுள்ள பகுதிகளில் தற்போது மிதிவெடி அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

முன்பு முகாம் வீதி ஊடாகச் செல்லும் பருத்தியடைப்பு ஊருண்டி பகுதிகளில் மிதிவெடி அகற்றும் பணிகள் நடைபெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-72)

# கட்டடத் தொகுதி திறப்புவிழா

கலைக்கோட்டத்தின் கட்டடத்திறப்பு விழா நாளை சனிக்கிழமை 12 மணிக்கு நடைபெறவுள்ளது. அருட்திரு ஜே.பி.ஈ.செல்வராசா அடிகள் மேற்படி கட்டடத் தொகுதியை திறந்துவைக்க உள்ளார்.

திருமறைக் கலாமன்றம் 40 ஆவது ஆண்டு நிறைவில் தனது செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்தும் முகமாக பொங்கல் தினத்தில் கலைக் கோட்டம் கட்டடத் தொகுதியை திறந்துவைக்க முன்வந்துள்ளது. (க-51)

# தேசிய இளைஞர் தினம்

(பருத்தித்துறை)

சுவாமி விவேகானந்தரின் தேசிய இளைஞர் தினம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கே.பொன்னம்பலம் தலைமை தாங்குவார்.

இந் நிகழ்வில் பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா சிறப்புரையாற்றுவார். (க-52)

## இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 82

### படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



'கரகாட்டக் காரன்' படம் மூலம் முன்பு தமிழ்த் திரையுலகில் பிரகாசித்த இவர் மீண்டும, களமிறஙகுவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார். இவரை உஙகளுககுத் தெரிநதால் உஙகள விடைகளை எழுதி எதிர்வரும் 19 ஆம் திகதிககு முன்னா கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைககவும. நீஙகள அனுப்ப வேணடிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 82**
**வலம்புரி – சங்குநாதம்**
**இல-03, 02ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:-
சரியான விடை எழுதுபவர்களில மூன்று போட்டியாளாகளுககு குலுககல முறைமூலம தெரிவுசெய்யபபட்டு பரிசு வழஙகப்படும்.


பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணததினை 'வலம்புரி' காரியாலயததில் பெற்றுக்கொள்ளவும.

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 82

படத்தில் உள்ளவரின் பெயர் :-....................
அனுப்புபவரின் முழுப்பெயர் :-....................
அனுப்புபவரின் முகவரி :-....................
....................
....................

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 80

சரியான விடை





புரட்சிக் கலைஞர் **விஜயகாந்த்**

### இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல.80இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | செ.திவ்வியன்<br>பருத்தித்துறை வீதி,<br>நல்லூர்,<br>யாழ்ப்பாணம். |
| இரண்டாம் பரிசு | :- | ஜெ.சுகிர்தினி<br>கோண்டாவில் கிழக்கு,<br>கோண்டாவில். |
| மூன்றாம் பரிசு | :- | சி.ஜெயரூக்ஷன்<br>இலங்கை வங்கி ஒழுங்கை,<br>சுன்னாகம் தெற்கு,<br>சுன்னாகம். |

### சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்:

இ.யூஜினா மரியா, குருநகர். அ.செல்வி, பருத்தித்துறை. கே.அரசேஸ்வரன், நல்லூர். வ.சிவாஜி, கரணவாய் கிழக்கு. மா.நாகதுஷ்யந்தினி, யாழ்ப்பாணம். சி.பிரதீபா, குப்பிளான் தெற்கு. Y.வானதி, யாழ்ப்பாணம். ட.குலானந்தன், கொட்டடி. சி.குலம், ஊர்காவற்றுறை. ஆ.உமாசங்கர், திருநெல்வேலி. T.S.சயந்தன், வட்டுக்கோட்டை. யோ.சன்யூரி, நீர்வேலி. வே.குமாரசுவாமி, கரவெட்டி. வ.சோபா, இணுவில். தீ.அரவிந்தன், கோண்டாவில். ஜெ.குணசீலன், உடுவில். ஆ.பவதர்சன், ஓட்டுமடம். ம.மைதிலி, கோண்டாவில். நா.பிரியா, கரவெட்டி. க.நிலோஜா, நீர்வேலி. க.தாட்சாயினி, குடத்தனை. சா.விஜிதா, குருநகர். P.S. ராணி, வட்டுக்கோட்டை. யோ.கலாரஞ்சி, சாவகச்சேரி.

## வியத்தகு எண்ணெய் மருத்துவம்

**வா**ய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்ற பழமொழி நடைமுறையில் உண்மை. அதுபோல மற்றொரு அனுபவ உண்மை வாயில் நல்லெண்ணெய் விட்டுக் கொப்புளித்து வந்தால் நோய்கள் பல நீங்கும்.

சிரமம் ஏதுமின்றி மிக எளிதாகச் செய்யக் கூடிய எண்ணெய் கொப்புளித்தலை (Oil Pulling) செய்து வருவது உடல் நலத்தைப் பேணிக் காக்கும்.

### எண்ணெய் கொப்புளித்தல் செய்யும் முறை

சுத்தமான நல்லெண்ணெய் 2 தேக்கரண்டி அளவு எடுத்து வாயில் விட்டுக் கொண்டு அதை வாய் முழுவதும் படும்படியாகக் கொப்புளிக்க வேண்டும். 15 முதல் 20 நிமிடங்கள் வரை கொப்புளிக்கலாம். பற்களின் இடைவெளிக்குள் எண்ணெய் போகும்படி செய்ய வேண்டும். 15 நிமிட நேரத்தில் எண்ணெய் நுரைத்து வெண்மையாகி நீர்த்துப் போய்விடும் அப்போது அதை உமிழ்ந்து விட வேண்டும். அதன் பிறகு வாயை நான்கு அல்லது ஐந்து முறை நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்து கொள்ளலாம்.

### எந்த நேரத்தில் செய்ய வேண்டும்

நல்ல பசி ஆழந்த அமைதியான உறக்கம் நல்ல மனநிலை ஆகியவை வரும்வரை எண்ணெய் கொப்புளிப்பதைத் தொடர்ந்து செய்ய வேண்டும். ஒன்பது மாதம் முதல் ஓராண்டு காலம் வரை எண்ணெய்க் கொப்புளிப்பு நல்லது. அப்படிச் செய்தால் ஓராண்டுக்குள் அனைத்துப் பருவங்களிலும் ஏற்படும் மாறுதல்கள் காரணமாக ஏற்படும் நோய்கள் ஒவ்வாமை இவற்றிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கிறது.

தோலின் மீது குழிகளும் வெடிப்புகளும் மறைந்து தோல் பளபளப்பாகும். கால், கை, விரல்கள் மெருகுற்று இரத்த ஓட்டம் பெருகியதற்கான அறிகுறிகள் தெளிவாகத் தெரியும். இத்தகைய மாறுதல்கள் உள் உறுப்புக்களிலும் ஏற்பட்டு அவை அனைத்தும் முழு நலத்துடன் சிறப்பாகச் செயற்படும்.

அதாவது உடலினுள் இருக்கும் அனைத்துப் பாகங்களிலும் இரத்த ஓட்டம் சீரடைகிறது என்பது இதன் பொருள். இது முழு நலமுடைய உடலுக்குச் சரியான அறிகுறி.

*நன்றி; ஆனந்தவிகடன்*

**தன்னுடைய சமுதாயத்தின் சீர்கேட்டைக் காண எவன் ஒருவன் மறுக்கிறானோ அவன் கண்ணில்லாத குருடன் ஆவான்**


## மிகச் சிறிய ரீ-வி மொபைல் போன்

**ந**வீன முறையில் வியக்கத்தக்க வகையில் பல்வேறு நாடுகளும் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் கண்டுபிடிப்புக்களை உலகுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கின்றனா். அந்த வகையில் பிரபல கொரியக் கம்பெனி தயாரித்த மிகச்சிறிய போர்ட்டபுள் டி.வி மொபைல் போன் ஒன்று உலகிலேயே மிகச் சிறிய டி.வி மொபைல் போன் என்ற அளவில் கின்னசில் சாதனையாக இடம்பிடித்துள்ளது.

எஸ்.சி.எம். 220 என்று பெயரிடப்பட்டுள்ள இந்த சாதனை டி.வி மொபைல் போனின் நீளம் 92 மில்லி மீற்றரும் அகலம் 51 மில்லி மீற்றரும் உயரம் 36 மில்லி மீற்றரும் அளவு கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சாதனை டி.வி மொபைல் போனில் சுமார் இரண்டே முக்கால் மணி நேரம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-86



*அனுப்பவேண்டிய முகவரி:*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 86**
**'வலம்புரி – சங்குநாதம்'**
**இல-03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

முழுப்பெயர் :- ....................................
முகவரி :- ....................................
....................................
....................................

இங்கே வெட்டுக ------------------------------ ✂

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

### இடமிருந்து வலம்

(1)பிறர் மனதைத் தன்பால் கவரும் செயல். (4) கடுங்கோபம் -இதனைக் குறிக்கும். (5)கிணற்றிலிருந்து நீரைப் பெற்றுக் கொள்ளப் பயன்படுத்தப்படும் சாதனம். (7)நாம் பிறர்மேல் காட்டும் பேரன்பு. (8)பயிர்ச்செய்கை.

### மேலிருந்து கீழ்

(1)இலங்கையிலுள்ள மிகவும் நீளமான ஆறு. (2)தேர்தலின்போது ஒவ்வொரு கட்சிகளுக்கும் இது வழங்கப்படும். (3) செய்தொழிலில இது உள்ளவன் முன்னேறுவான். (6)இளஞ்சந்திரன் -இப்படியுமழைப்பர். (7)பிறருக்கு நாம் கொடுக்கும நம்பிக்கையான இதனை நிறைவேற்ற வேண்டும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல - 84 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1.பேச்சுவார்த்தை 4.மைதானம் 6.ஆல் 7.அநாதை 8.பந்து 10.துரிதம்

**மேலிருந்து கீழ்**

1.பேதமை 2.வாசம் 3.தையல் 5.தாய்நாடு 6.ஆனந்தம் 9.நரி

### பரிசுபெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | A.ராகவி<br>கே.கே.எஸ்.வீதி,<br>யாழ்ப்பாணம். |
| இரண்டாம் பரிசு | :- | K.பிரதீபன்<br>வல்வெட்டி,<br>வல்வெட்டித்துறை. |
| மூன்றாம் பரிசு | :- | த.ரம்மியா<br>50/25, வைரவகோயிலடி,<br>கொட்டடி,<br>யாழ்ப்பாணம். |

### போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறுவோரின் பெயர் விபரம்:

P.S.ராணி, வட்டுக்கோட்டை. சா.விஜிதா, குருநகர். ஆ.உமாசங்கர், திருநெல்வேலி. கு.குஜாயினி, கொட்டடி. வ.சிவாஜி, கரணவாய் கிழக்கு. ஏ.வாசவி, அரியாலை. மூ.கணேசமூர்த்தி, கரவெட்டி. ஞா.இராஜோதயன், கோப்பாய். வே.குமாரசுவாமி, கரவெட்டி. க.குருநாதன், கோண்டாவில். இ.யூஜினா மரியா, குருநகர். இ.ரஞ்சினி, அரியாலை. A.செல்வி, காளிகோவிலடி. வ.மன்னர் அன்ரனி, குருநகர். யோ.சிவாஜினி, சாவகச்சேரி. சி.சங்கீதா + சம்பூரணி, வட்டுக்கோட்டை. லோ.அபிராமி, வல்வெட்டி. து.நக்கீரன், மல்லாகம். வி.இளங்கோ, கோப்பாய். மா.அருந்ததி, பருத்தித்துறை. சொ.சௌத்ரி, திருநெல்வேலி.

மனிதன் எந்தளவு உயர்ந்தவன் ஆகின்றானோ அந்தளவுக்கு அவன் கடுமையான சோதனைகளையும் கடந்து சென்றாக வேண்டும்.

-சுவாமி விவேகானந்தர்.

வலம்புரி

# கண்காணிப்புக்குழு வெளியேறினால்....

யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கின்ற போதிலும் ஆங்காங்கே இடம் பெறுகின்ற அசம்பாவிதங்கள், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், உயிரிழப்புக்கள் மக்கள் மத்தியில் மீண்டும் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வெளி மாவட்டங்களுக்கு செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

வீட்டு மதில் அருகே படையினர் ஆயுதம் ஏந்திய வண்ணம்-எந்நேரமும் சுட்டு வீழ்த்துவதற்கு தயாராக இருக்கின்றபோது மக்களின் நகர்வைத் தடுப்பது முடியாத காரியமாகும்.

யாழ். மாவட்டதில் இதே நிலைமை நீடிக்குமாயின் அனைத்து மக்களும் தமக்குப் பாதுகாப்புஅளிக்கும் எனக் கருதும் இடங்களுக்குச் செல்வர்.

அப்படி ஒரு நிலைமை ஏற்படுவதும், ஏற்படாமல் தடுப்பதும் அரசின் கைகளிலேயே இருக்கின்றது. யுத்தநிறுத்த உடன்படிக்கை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம் பெறுவதை மட்டும் கட்டுப்படுத்தவில்லை.

மாறாக தமிழர் தாயகத்தில் மக்களின் வாழ்விடங்களில் சூழ்ந்து கொண்டுள்ள படையினர் குறிப்பிட்ட எல்லைக்கப்பால் முகாம்களுக்குள் முடங்கிக் கொள்ளவேண்டும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 3 மாதங்களுக்குள் அமுல்படுத்தப்படவேண்டிய - வடக்குக் கிழக்கிலான இயல்பு நிலை இதுவரை ஏற்படுத்தப்படவில்லை.

யுதநிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்து விட்ட போதிலும் இயல்பு வாழ்க்கை நிலை இதுவரை ஏற்படுத்தப்படாததற்கான காரணம் தான் என்ன?

தமிழர் தாயகத்தில் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட வேண்டும்- அதற்காக படையினர் குறிப்பிட்ட தூர இடவெளியில் இருக்க வேண்டும் என்ற சரத்து சரியான முறையில் கடைப்பிடிக்கப்பட்டிருந்தால் தற்போது குழப்ப நிலை ஏற்பட வாய்ப்பிருந்திருக்க மாட்டாது.

எதனையும் வழங்குவதற்கு தயாரில்லாத அரசு எந்த உடன்படிக்கைகளைச் செய்து கொண்டாலும் அதன் ஒழுங்கு முறைகள் குழப்பமாகவே அமையும்.

எது வாயினும் தற்போது யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலையால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிகள் பாதிப்படைந்துள்ளன. நிலைமை மோசடைந்தால் தமது பணியை நிறுத்தி விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்படும் என கண்காணிப்புக் குழுத் தலைவர் அறிவித்துள்ளார்.

இவ்வறிப்பானது சமாதானத்துக்கு ஆரோக்கியமானதல்ல. யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு வெளியேறுமாயிருந்தால் அதன் விளைவு யுத்தமாகவே இருக்கும். எனவே இது விடயத்தில் அனைத்துத் தரப்பினரும் அரசுக்கு அழுத்தம் கொடுத்து தமிழ்ப் பகுதிகளில் ஆயுதம் ஏந்திய வண்ணம் காத்திருக்கும் படையினரை நகர்த்த உதவவேண்டும்.

# போக்குவரத்து விதிகளை மீறியதாக 3 இலட்சத்துக்கும் அதிக வழக்குகள்

(கொழும்பு)

கடந்த ஆண்டு போக்குவரத்து விதிகளை மீறிய சம்பவங்கள் தொடர்பாக 3 இலட்சத்து 28 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் விசாரிக்கப்பட்டுள்ளன.

2005 ஆம் ஆண்டில் குடிபோதையுடன் வாகனத்தைச் செலுத்திய சமயம் கைதுசெய்யப்பட்ட சாரதிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக கொழும்பு போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2003 ஆம் ஆண்டில் குடிபோதையில் வாகனத்தைச் செலுத்திய 605 சாரதிகள் கைதுசெய்யப்பட்டார்கள்.

கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 3ஆயிரத்து 491 என்ற மட்டம் வரை உயர்ந்ததாக போக்குவரத்துப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வை.ஜி.ஆர்.எம்.லாகீர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த வருடம் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை சிறிதளவு குறைந்துள்ளது. 2004ஆம் ஆண்டு 9 ஆயிரத்து 665 விபத்துக்கள் பதிவு செய்யப்பட்டன.

கடந்த் ஆண்டு பதிவு செய்யப்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை 6ஆயிரத்து 278ஆகும்.

எதிர்காலத்திலும் விபத்துக்களின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டும் என்பது பொலிஸாரின் எதிர்பார்ப்பு ஆகும்.

இதற்காக கொழும்பு மாநகரை மையமாகக் கொண்டு விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்செய்யப்படும் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (க-7)

# அரச சேவையின் திறமை, செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் அமுலுக்கு

(கொழும்பு)

அரசாங்க சேவையின் திறமையையும் செயற்பாட்டையும் அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் மிக விரைவில் நடைமுறைக்கு கொண்டுவரப்படவுள்ளது.

அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பா கருத்து வெளியிடுகையில்,

இதுதொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது என்றார்.

இந்தத் திட்டத்தின் பெறுபேறுகளை மதிப்பீடு செய்யவென சகல அமைச்சுக்களிலும், அரச திணைக்களங்களிலும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

அமைச்சுக்களின் குழுக்களுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்களே தலைமை தாங்குவார்கள். திணைக்களங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் திணைக்களத் தலைவர்கள் தலைமை வகித்தே உள்ளனர்.

இந்தக் கண்காணிப்புக் குழுவில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் இடம்பெறுவது முக்கிய அம்சமாகும். (க-7)

# மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சமையல் எரிவாயு விநியோகம்

(கொழும்பு)

செல் சமையல் எரிவாயு நிறுவனம் 12.5 கிலோக்கிராம் நிறையைக் கொண்ட சமையல் எரிவாயு கொள்கலன் விநியோகத்தை மட்டுப்படுத்த தீர்மானித்துள்ளது.

தமது விலை உயர்வு கோரிக்கையை நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை கவனத்தில் கொள்ளாமையை அடுத்தே இந்த முடிவை மேற்கொண்டதாக செல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலையில் செல் உற்பத்திகளை இறக்குமதி செய்து 850ரூபாவிற்கு விநியோகம் செய்வதன் மூலம் செல் நிறுவனத்திற்கு 64 ரூபா வரையில் நட்டம் ஏற்பட்டுள்ளது.

இதனை ஈடுசெய்வதற்காக செல் சமையல் எரிவாயுவின் விலையை 994ரூபாவாக உயர்த்துவதற்கு செல் நிறுவனம் அனுமதியைக் கோரியிருந்தது.

நுகர்வோர் அதிகார பாதுகாப்பு சபை கடந்த டிசம்பர் 31 ஆம் திகதி வரை கால அவகாசம் கோரியிருந்தது.

இதனையடுத்து கால அவகாச கோரிக்கையை நேற்று முன்தினம் வரை அதிகாரசபை நீடித்திருந்தது. எனினும் இதுவரை உரிய பதில் வழங்கப்பட்டமையை அடுத்து தாம் விநியோகத்தை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக செல் சமையல் எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது. (அ-9)

# வடமராட்சி கிழக்கில்— சவுக்கு மரங்கள் தறிப்பு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில் ஏராளமான சவுக்கு மரங்கள் தறிக்கப்பட்டு விறகுக்காக எடுத்துச் செல்லப்படுகிறது.

தற்போதைய அசாதாரண சூழல் நிலையைப் பயன்படுத்தும் சிலர் நாளாந்தம் துவிச்சக்கரவண்டி மூலம் விறகுகளை எடுத்துச் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

மணற்காட்டிலிருந்து குறுக்கு வழியாகவும் மந்திகை ஊடாகவும் பருத்தித்துறை வியாபாரி மூலை ஆகிய இடங்களிலுள்ள வெதுப்பகங்களுக்கும் உணவகங்களுக்கும் துவிச்சக்கரவண்டி மூலம் விறகு எடுத்து வரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. சவுக்கு மரங்களை அழிப்பதால் சூழல் பாதுகாப்பு அச்சுறுத்தலாக இருக்கும்.

எனவே இதனால் ஏற்படும் அபாய நிலையைத் தடுத்து நிறுத்துமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டோருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (க-35)

# க.பொ.த உயர்தரம் சித்தியடைந்த 35 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துறையில் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாக பிரதி நிதியமைச்சர் றஞ்சித் சியாம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சகல அமைச்சுக்களின் செயலாளர்களிடமும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருப்பதாகவும் பிரதிநிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வருடம் வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்று தெரிவித்திருக் கும் பிரதியமைச்சர், இதில் 10ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்படுமென்றும் சுட்டிக் காட்டினார்.

இதுதவிர க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த 35ஆயிரம் பேருக்கு இவ்வருட இறுதிக்குள் வேலைவாய்ப்பு வழங்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

# மரண தண்டனையை அமுல்படுத்த ஜனாதிபதி மஹிந்த தீர்மானம்

(கொழும்பு)

மரணதண்டனையை மீண்டும் அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருப்பதாக சட்டம் மற்றும் நீதி மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கொலை, போதைப்பொருள், பாலியல் வல்லுறவு, சிறுவர்களை கடத்திச் சென்று கப்பம் கோரல் ஆகிய குற்றச் செயல்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படுமென்று பிரதியமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சட்டங்களைக் கொண்டுவரும் பணிகளில் நீதியமைச்சின் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளார்கள். (த-9)

# யாழ் நகர திட்டமிடல்

யாழ் நகர திட்டமிடல் தொடர்பாக, எதிர்வரும் 16ஆம் திகதி 10.00 மணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் மறு திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (அ)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



நாம் பலவாகத் தோன்றுகிறோம். ஆனால் நமது உண்மை ஒன்றே. அந்த ஒன்றிலிருந்து வேறுபட்டவர்களாக நம்மை நாம் எவ்வளவு குறைவாக நினைக்கிறோமோ அவ்வளவு நமக்கு நல்லது. அந்த முழுப் பொறுப்பிலிருந்து (இறைவன்) நாம் வேறுபட்டவர்கள் என்று எவ்வளவு அதிகமாக நினைக்கிறோமோ அவ்வளவுக்கு துயரமும் அதிகமாகும்.

சுவாமி விவேகானந்தர்

# அனைத்துக் கட்சியுடனான கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி என அறிவிப்பு

## தமிழ்க் கூட்டமைப்புடன் விசேட சந்திப்பாம்

(கொழும்பு)

எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கலந்து கொள்ளாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனினும் அவர்களுடன் பிரதான கலந்துரையாடல் ஒன்றினை ஜனாதிபதி மேற் கொள்வார் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அரச திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டிலேயோ அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் படையினருக்கு சேறுபூசும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்கள். அவர்களின் இச் செயற்பாட்டினை அரசாங்கம் கண்டிக்கின்றது.

இந் நிலையில் நோர்வேயின் இலங்கைக்கான விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்மின் வருகையின் பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான சாதகமான சூழ்நிலை உருவாகும். புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னர் நோர்வேப் பிரதிநிதி ஒருவர் வருகை தரவிருப்பது இதுவே முதல் தடைவையாகும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறப்படுவது மற்றும் விடுதலைப் புலிகளின் தற்போதைய நிலைப்பாடு என்பன குறித்து எரிக்சொல் ஹெய்மின் கிளிநொச்சி விஜயத்தின் பின்னர் அறியமுடி யும்.

எரிக்சொல்ஹெய்மின் வருகையின் பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஒரு சிறந்த சூழ்நிலையை எம்மால் உருவாக்கமுடியும்.

இதேவேளை விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பது சகல அரசியல் கட்சிகளும் இணங்கியிருக்கின்றன என்றார்..

பேச்சுவார்த்தை தொடர்பான முயற்சிகள் ஒரு சிறந்த நிலையில் இருப்பதாக குறிப்பிட்ட அமைச்சரவைப் பேச்சாளர், சகல அரசியல் கட்சிகளும் யுத்தத்துக்குச் செல்ல வேண்டும் என்று கூறிவருகின்றன எனத் தெரிவித்தார்.

சமாதான செயற்பாடுகள் தொடர்பாக ஆராயும் பொருட்டு சகல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் எதிர்வரும் 19 ஆம் திகதி பேச்சுவார்த்தை நடத்தப்படும். ஒவ்வொரு கட்சிகளினதும் சார்பில் அதிக பட்சமாக ஐந்து பிரதிநிதிகள் கலந்து கொள்ளவேண்டும் என்றும், கட்சியின் சார்பில் ஒருவர் மாத்திரம் கருத்து வெளியிடுவதனை சில கட்சிகள் விரும்ப வில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-4)

# யாழ்ப்பாண தமிழீழ நீதிமன்றம் நேற்றுப் பளையில் திறந்து வைப்பு

புளைப் பகுதியில் யாழ்ப்பாண தமிழீழ நீதிமன்றம் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பளை தமிழீழ காவல் துறை நிலையத்துக்கு முன்னால் அமைந்துள்ள இந் நீதிமன்றத்தினை யாழ் . மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி திறந்து வைத்தார்.நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமான இந் நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ காவல் துறையைச் சேர்ந்த கானகன் ஏற்றி வைத்தார்.

நீதிமன்றின் பெயர்ப்பலகையை கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவாணன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

நீதிமன்றின் திறந்த மண்டபத்தை யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். (ச)


# Jaffna College Institute of Technology Vaddukoddai

## Apply immediately

### Computer Certificate Courses

**1. MS OFFICE**
- MS Word
- MS Excel
- MS Access &
- Power Point

*Duration: 4 Months*
*Fee: 2500/=*

**2. Certificate in Maya**
Advantages: Advertisement creation, Computer Games, 2D back ground Creations, Miracle Animation, 3D Modelling Objects.
*Duration: 3 Months*
*Fee: 4000/=*

**3. Certificate in Printing Technology**
- PageMaker
- Photoshop &
- CorelDraw

*Duration: 4 Months (Part time)*
*Fee: 3000/=*

**4. Certificate in Computer Hardware**
*Duration: 3 Months*
*Fee: 2000/=*

**5. Certificate in Macromedia Flash**
*Duration: 3 Months*
*Fee: 2000/=*

FOR APPLICATION FORMS AND DETAILS
CONTACT: Director
Jaffna College Institute of Technology,
Vaddukoddai
T.Phone: 0602213139
E.mail: jcit@sltnet.lk
(C-169)


# மன்னார் இராணுவத் தளபதியுடன் ஆயர் சந்தித்துப் பேச்சுவார்த்தை

மன்னாரில் படையினரின் கெடுபிடிகள் குறித்து மன்னார் மறை மாவட்ட ஆயர் தலைமையிலான குழுவினர் மாவட்டப் படைத் தளபதியை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

மாவட்டப் படைத் தலைமையகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை, மன்னார் மாவட்ட அரச அதிபர் வே.விஸ்வலிங்கம், மன்னார் நகர பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல் குரூஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

படைத்தரப்பினால் மக்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகள் குறித்து இந்தக் குழுவினர் படைத் தளபதி பிரிகேடியர் பெர்னாண்டோவிடம் விளக்கமளித்தனர்.

அண்மைக்காலத்தில் மன்னாரில் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள், பாஸ் கெடுபிடிகள், பேருந்துகள் மீதான சோதனைக் கெடுபிடிகள், அடையாள அட்டை சோதனையிடல் போன்ற விடயங்கள் மக்களை பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கியிருப்பதாக படைத் தளபதிக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(ச-4)

### ஊடக சுதந்திர...

தலாக உள்ளது.

அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி ஊடகவியலாளர்களைக் கைதுசெய்தல், இடையூறு விளைவித்தல் மற்றும் ஊடக நிறுவனங்களை சோதனைக்கு உட்படுத்தல் என்பன தொடர்பாக மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என அர சாங்கத்தைக் கோருவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். (ச-4)

### பரமேஸ்வராச்...

இராணுவத்தினர் மீது மேற் கொள்ளப்பட்ட கிரனைட் தாக்குதலில் ஒரு சிப்பாய் காயமடைந்துள்ளார். இதனையடுத்து இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

இதன்போது பஸ்சிற்காக காத்திருந்த வயோதிபர் ஒருவர் மயக்கமடைந்து நிலத்தில் விழுந்தார். துப்பாக்கிச்சூட்டுச் சத்தத்தை கேட்டவுடனேயே அவர் மயங்கி நிலத்தில் வீழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டது. அப்போது காயமடைந்த அவர் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுன்னாகத்தைச்சேர்ந்த சிவலிங்கம் கதிர்காமநாதன் (வயது 60) என்பவரே காயமடைந்தவராவார். இதேவேளை இத் தாக்குதலினையடுத்து இராணுவத்தினரால் பரவலாக துப்பாக்கிப்பிரயோகம் மேற் கொள்ளப்பட்டது. இதனால் மக்கள் பதறியடித்தவாறு தமது பாதுகாப்பைத் தேடும்முயற்சியில் ஈடுபட்டனர். (ச-து-132,133)

### கடற்படை வாகனத்...

அநுராதபுரம் கடற்படை முகாமில் இருந்து நேற்று மாலை 6 வாகனங்களில் மன்னாருக்கு விடுமுறை முடித்துக் கொண்டு திரும்பிக் கொண்டிருந்த போது மன்னார் - மதவாச்சி வீதியில் செட்டிகுளத்துக்கும் அடம்பன் குளத்துக்கு மிடையில் மாலை4.20 மணியளவில் இத்தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.இதன் போது தொடர் அணியாகச் சென்ற பஸ் ஒன்று கிளைமோர்த் தாக்குதலில் சிக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதில் இருந்த 9 பேர் ஸ்தலத்திலேயே பலியாகினர். மேலும் மூவர் மதவாச்சி மருத்துவமனையில் உயிரிழந்தனர். படு காயமடைந்த 13 பேரில் 4 பேர் நேற்றிரவு அநுரா தபுரம் வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் சம்பவத்தினை யடுத்து கடற்படையினர் திருப்பிச் சுட்டதில் மருதமடுக் கிராமத்தைச் சேர்ந்த ஜெசிங்க என்பவர் பலியானதாகவும் மேலும் மூவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிளைமோர்க் கண்ணி வெடித் தாக்குதலினைத் தொடர்ந்து கடற் படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இத் தாக்குதல் சம்பவத்தினையடுத்து நேரியகுளம், மாங்குளம் நகரக் கடைகள் இழுத்து மூடப்பட் டன. வீதிகள் வெறிச் சோடின. பொது மக்கள் வீதிகளில் முடங்கினர். மதவாச்சி- மன்னார் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.அப்பகுதியில்தொடர்ந்து பதற்றம் நிலவுகின்றது. (ச-4)

### இருவேறு கோரிக்கைகளை...

பாதிக்கப்பட்டிருந்தது. இதேவேளை யுத்த நிறுத்தக்கண் காணிப்புக்குழுவின் தலைவர் ஆர்தர் உட் துறைமுக வீதியில் உள்ள தனது அலுவலகத்திற்குச் சென்ற வேளை கூட்டமொன்று இவரை வழிமறித்துச் செல்லவிடாது தடுத்ததாகவும் பின்பு பொலிஸாரின் பாதுகாப்பு டன் அவர் தனது அலுவலகத்திற்கு சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-4)

### அன்ரன் பாலசிங்கம்...

யில் அரசாங்கத்தைத் தொடர்பு கொண்ட பாலசிங்கம் பண்டாரநாயக்க விமான நிலையம் ஊடாக கிளிநொச்சி செல்வதற்கான பயண ஒழுங்குக்கு அனுமதி கோரியுள்ளதாக உறுதிப்படுத்தப் படாத செய் திகள் தெரிவிக்கின்றன என்று இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இம் முறை கிளிநொச்சி செல்லும் எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திக்க உள்ளதாகவும் அச்சந்திப்பில் பாலசிங்கமும் பங்கேற்பார் என்றும் கூறப்படுகிறது. (ச-4)

### சர்வதேச...

டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வன்னிப் பகுதிக்கு மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

இது குறித்து ஆலோசனை நடத்த கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் இன்று காலை 9 மணிக்கு இக்கலந்துரையாடல் நடைபெற உள்ளது. (ச-4)












இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.01.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.